பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 06 வெள்ளிக்கிழமை (19-03-2004) தொலைபேசி - 2223378 ஒலி 91

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT


ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# பிரபாவின் தலைமையுடனேயே பேச்சு

# என்னுடன் தொடர்பை ஏற்படுத்த கருணா பகீரத முயற்சி எடுத்தார்

## ஜனாதிபதி பி.பி.ஸிக்குப் பேட்டி





(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற அந்த இயக்கத்தின் முன்னாள் சிறப்புத் தளபதி கேணல் கருணா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தொடர்பு ஏற்படுத்த முயன்றதாகவும், அதற்குத் தான் எந்தவிதமான பதிலையும் அளிக்கவில்லையெனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பி.பி.ஸிக்கு நேற்றிரவு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை, மட்டு.-அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணாவை பதவிநீக்கம் செய்ததையடுத்து ஜனாதிபதியுடன் .தொடர்புகளை ஏற்படுத்த கருணா முயன்றார் என்று எழுந்த பல்வேறு ஊகங்களின் மத்தியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, அதிகாரபூர்வமாக நேற்றிரவு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியின்மூலம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போது விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்பட்டுள்ள பிளவானது சமாதான முயற்சிகளை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள பிளவானது அவ்வமைப்புக்குள் ஓர் யுத்தத்தை ஏற்படுத்தும் என்பதே எனது உடனடிக் கண்ணோட்டமாக உள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்பட்டுள்ள பிளவை நீண்ட கால நோக்கில் பார்ப்போமானால் அந்த அமைப்பின் பலம் வாய்ந்த இராணுவத் தளபதியாக இருந்த கருணா விலகியிருப்பது விடுதலைப் புலிகள் அமைப்பை பலவீனப்படுத்திவிடும். ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத தேர்தலின்பின் அமையக்கூடிய அரசு, விடுதலைப் புலிகளின் தலைவராக ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வே.பிரபாகரனையே அணுக வேண்டும். இருந்தபோதும், விடுதலைப் புலிகளிடம் இருந்து விலகிச்சென்ற கருணாவை எப்படி அணுகலாம் என்ற வழிமுறைகளையும் கண்டறிய வேண்டும். விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரிந்து சென்ற கருணா என்னை அணுகுவதற்கு பலதடவைகள் முயன்ற போதும், திரைமறைவு தொடர்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஓ.எல்.பரீட்சை முடிவுகள் 25-ம் திகதி வெளியாகும்

(கொழும்பு)

கடந்த 2003ம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை எதிர்வரும் 25ந் திகதி வெளியிடுவதற்கான சகல ஏற்பாடுகளையும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், பரீ

(12ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதியின் 16ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் அன்னை பூபதியின் 16ஆம் ஆண்டு நினைவு தினமும், நாட்டுப்பற்றாளர் நினைவு தினமும் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து ஒரு மாதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தியாகதீபம் அன்னைபூபதி இந்திய இராணுவத்திற்கெதிராக 1988ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலய முன்றலில் உண்ணா நோன்பிருந்து ஈகச்சாவடைந்தார்.

அவரது நினைவு தினமும், நாட்டுப்பற்றாளர் நினைவு தினமும் அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் இன்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் – பாலா லண்டனில் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் காலை லண்டனை சென்றடைந்த சொல்ஹெயம் அன்ரன் பாலசிங்கத்துடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக அரசியல வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

இச்சந்திப்பின் போது கருணா விவகாரம், இலங்கையின் தேர்தல்,

(12ஆம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!

**பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2004 தொடர்பான கருத்துக் கணிப்புப் போட்டி**

நாளைய வலம்புரியில் எதிர்பாருங்கள்.

## யாழ். மண்ணுக்குப் பெருமைதரும் 'வடக்கின் மாபெரும் போர்'

### சுரேஷ் பிரேமச்சந்திரன் புகழாரம்

'வடக்கின் மாபெரும் போர்' என்று வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரிகளுக்குமிடையிலான நூறாவது கிரிக்கெட் ஆட்டம் கிரிக்கெட் ரசிகர்களுக்கு மாத்திரமல்லாமல் இக் கல்லூரிகளின பழைய மாணவர்களுக்கும் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்

விளையாட்டுத்துறையில் பெரும


(12ஆம் பக்கம் பார்க்க)



நாடாளுமன்ற பொதுத் தேர்தல்–2004

யுத்தத்தில் அழிந்த நம் தாயகத்தை கட்டியெழுப்ப...
புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளை துரிதப்படுத்த...
மத்தியில் கூட்டாட்சியுடன் மாநில சுயாட்சியை நிறுவ...
மனித நேயம், பன்மைத்துவம், ஜனநாயகம் மலர...

மக்களே ஆணையிடுங்கள்!
வீணைக்கு வாக்களியுங்கள்!!



X

(சி-7448)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



திரு.வீ.ஆனந்தசங்கரி
(முன்னாள் பா.உ. யாழ்ப்பாணம்)
இல. 4

தமிழினத்தின் விடியலுக்கான தீர்வு
சுயநிர்ணய உரிமையுடனான
சுதந்திர வாழ்வு.....

வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான

சுயேச்சைக்குழு - 01 | X | 4 | 6



செ.கந்தையன்
(முன்னாள் மேயர்– யாழ்ப்பாணம்)
இல. 6

(சி-7449)

# அரசாங்க அறிவித்தல்

## பாராளுமன்றத் தேர்தல் - 2004.04.02

### கனிஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கான/வாக்களிப்பு எழுதுநர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் 2004 தொடர்பாக நடைபெறவுள்ள மேற்படி கூட்டங்கள் பின்வரும் இடங்களில் அவற்றுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் நடைபெறவுள்ளன. இவற்றிற்கான அறிவித்தல்கள் ஏற்கனவே சகல கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள்/வாக்களிப்பு எழுதுநர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவே அறிவிக்கப்பட்டதற்கமைய குறிப்பிட்ட திகதியில் உரிய நேரத்தில் தவறாது அவர்களைப் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.


1. யாழ். இந்துக் கல்லூரி – 2004.03.20 – காலை 9.30 / மாலை 2.00 மணி
2. இராமநாதன் கல்லூரி – 2004.03.21 – காலை 9.30 / மாலை 2.00 மணி
3. மானிப்பாய் இந்துக் கல்லூரி – 2004.03.20 – காலை 9.30 / மாலை 2.00 மணி
4. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி – 2004.03.21 – காலை 9.30 / மாலை 2.00 மணி
5. சாவகச்சேரி இந்துக் கல்லூரி – 2004.03.20 – காலை 9.30 / மாலை 2.00 மணி
6. வேலணை சரஸ்வதி வித்தியாலயம் – 2004.03.21 – காலை 9.30 / மாலை 2.00 மணி
7. வட இந்து மகளிர் கல்லூரி – 2004.03.20 – காலை 9.30 / மாலை 2.00 மணி
8. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் – 2004.03.21 – காலை 9.30 / மாலை 2.00 மணி
9. கிளிநொச்சி மகா வித்தியாலயம் – 2004.03.20 – காலை 9.30 / மாலை 2.00 மணி


தெரிவத்தாட்சி அலுவலர்
இல. 10 யாழ். தேர்தல் மாவட்டம்.

(c-7447)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்குப் பெற்றோர்களால் கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்யப்பட்ட 'வீரசங்கிலியன்' விளையாட்டு மைதானத்தின் பெயர்ப்பலகையை மைதான அமைப்புக்குழுத் தலைவர் ந.சண்முகதாஸ் திரை நீக்கம் செய்துவைப்பதைப் படத்தில் காணலாம்.





பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகளான ஜெகான் பெரேரா, விமல் பெர்னாண்டோ ஆகியோர் அரசசார்பற்ற இணையத்தில் குடாநாட்டு நிலைமை தொடர்பாக ஆராய்வதை முதலாவது படத்திலும், இணையத் தலைவர் வி.சக்திவேல் குழுவினர் நிலைமைகள் குறித்து விளக்குவதை 2ஆவது படத்திலும் காணலாம். (படங்கள்:- சாந்தன்)

## பாராட்டு விழா

(தொல்புரம்)

தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் தேவஸ்தான அர்ச்சகர் சிவஸ்ரீ சு.ரங்கநாதன் ஐயாவிற்கு அண்மையில் குருப்பட்டமளிக்கப்பட்டமையை பாராட்டி எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் பாராட்டுவிழா நடைபெறவுள்ளது. (தி-70)

## தையல் கண்காட்சி

(காரைநகர்)

காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் ஏற்பாட்டில் புதுறோட்டில் அமைந்துள்ள போருட் அலுவலகத்தில் நாளை சனிக்கிழமை காலை 10.00மணிக்கு மாபெரும் தையல் கண்காட்சியொன்று இடம்பெறவுள்ளது.

அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சி நிகழவில் பிரதம விருந்தினர்களாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் மற்றும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (தி-246)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி

கடந்த சில ஆண்டுகளாக யாழ். பல்கலைக்கழகம் நடத்தி வந்த ஒருவருடகால மீன்பிடியியல் டிப்ளோமாவை பூர்த்தி செய்தவர்களுள் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு குறிப்பிட்ட தொகையினருக்கு மேலும் ஒரு ஆண்டு பயிற்சியளிப்பது மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் இரு ஆண்டு மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமாவைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பு இவ்வாண்டு மட்டுமே வழங்கப்படும். கற்கைநெறி 2004.05.10 அன்று தொடங்கி ஓராண்டு காலம் நடைபெறும்.

**கட்டண விபரம்:**

| | |
|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா 500/- |
| கற்கைநெறிக் கட்டணம் | ரூபா 15000/- |
| மீளப்பெறக்கூடிய வைப்பு | ரூபா 500/- |

கற்கைநெறிக் கட்டணம் முழுமையாக அல்லது இரண்டு தவணைகளில் சமபங்குகளாக - ஒன்று பதிவு மேற்கொள்ளும்பொழுதும், மிகுதி இரண்டாம் அரையாண்டு ஆரம்பிப்பதற்கு முன்பும் - செலுத்தப்படவேண்டும்.

யாழ். பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட ஒருவருட மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியில் சித்திபெற்றவர்கள் எவரும் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம். தெரிவு திறமை அடிப்படையில் அமையும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக் கழகப் பரீட்சைகளும், அனுமதிகளுக்குமான உதவிப் பதிவாளர் பிரிவில் 50 ரூபா கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் உதவிப் பதிவாளர் விஞ்ஞானபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 2004.04.16 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

பதிவாளர்.
2004.03.18 (சி-7392)

## தனியார் சுத்திகரிப்புச் சேவை

யாழ். போதனா வைத்தியசாலையில் சுத்திகரிப்புச் சேவையை 01.07.2004 தொடக்கம் 30.06.2005 வரை வழங்குவதற்கு தனியார் சுத்திகரிப்புச் சேவை நிலையங்களில் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| தேவைான ஊழியர்களின் எண்ணிக்கை | – 40 |
| மேற்பார்வையாளர்கள் | – 04 |
| விண்ணப்ப முடிவுத்திகதி | – 31.03.2004 |

விண்ணப்பங்கள் 31.03.2004-10.00மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றையதினம் கேள்விகள் திறக்கப்படும். தகுதியுடைய தனியார் சுத்திகரிப்பு நிலையங்கள் நேரிலோ தபால்மூலமோ பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத ரூபா 250/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்
பணிப்பாளர், போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (சி-7390)

சங்குநாதம்




தமிழரின் உறவைக் குலைக்கும் அமெரிக்க ஊடுருவல் - விதுரன்

விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் - ஜெயன்

விக்கட்டை வீழ்த்த போடுகிறார்! வோல்ஸினைத் தாண்ட ஓடுகிறார் - சேந்தன்

வியாசரின் பதில்கள்

சினிமாச் சிதறல்

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்

வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை ரூபா: 15.00

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

77

## நான்காம் பகுதி
## முக்குவர் சட்டம்

## 1.மட்டக்களப்பு தேசம்

### ஐரோப்பியர் ஆட்சியில் வன்னிபப் பதவி

போடி கல்வெட்டு என்னும் பாடலில் அறுமக்குட்டிப் போடிக்கு ஒல்லாந்தர் நியமனப் பத்திரம் வழங்கிய செய்தி சொல்லப்படுகின்றது. அதனைப் பற்றிய பகுதி மேல்வருமாறு உள்ளது.

"சங்க மொன்றியற்றித் தலைமையாய் வைத்து
போத்து நாட்டரசன் குகன் புகழ் பரப்பி
காத்தனர் இராச குடும்பமாய் வைத்து
நிலைமையாய் எங்களை நிருபித்த பின்பு
தலைமையாயிருந்தோம் தாரணி மகிழ
ஒல்லாந்தரசே உமக்கிது உரைத்தோம்
பொல்லாங்ககற்றிப் போடியாய் வைத்தால்
செந்நெல் செழிக்குந் தேன் சொரிந்தொழுகும்
மன்னர் மகிழ மண்முனை தனக்கும்
என்றிடக் குகனும் ஏந்தலன் மகிழ்ந்து
பண்டு முன்முறைமை பகுக்கவென்றெண்ணி
அறுமக்குட்டியை அழைத்திடச் செய்து
பெறுமுன்னரசு பெருமையாய் வழங்க
போடி யென்றுரைத்துப் புகழ் பெற்றிருந்து
நாடுகள் தெரிய நன்முறை சாற்றி
...............................
கதிபெறு ஒல்லாந்தர் கட்டளை கொடுத்து
மட்டக்களப்பும் மண்முனைப்பற்றும்
திட்டப்படுத்திச் சிற்றரசாக்கி
வைத்தனனிந்த மாநகர் தன்னில்"

முக்குவரினத்தைச் சேர்ந்த காலிங்கா குலத்துப் போடிகள் பரம்பரை பரம்பரையாக மட்டக்களப்பு, மண்முனை என்னும் பகுதியிலே ஆட்சி புரிந்தவர்கள்; வன்னிமை, நிலமைப் போடி என்னும் பட்டங்களை அவர்கள் பெற்றிருந்தார்கள் ; காலகாலமாகச் செம்மையாகப் பரிபாலனஞ் செய்தவர்கள் அவற்றின் காரணமாகக் கண்டிச் சிங்கள மன்னர்களும் போர்த்துக்கேயரும் அறுமக்குட்டிப்போடியின் முன்னோர்களுக்குப் பதவிகளையும் அதிகாரங்களையும் வழங்கினார்கள். அவற்றை அறிந்து , பழைய வழமைகளை நிலை நாட்டும் எண்ணத்தோடு ஒல்லாந்தர்கள் அறுமக்குட்டியைப் போடியாக நியமித்தார்கள். போடி என்பது ஒரு நிர்வாகப் பதவிப்பெயராகவும் வழங்கி வந்துள்ளமை, அதனாலே தெளிவாகின்றது. அது சிற்றரசரான வன்னிபத்திற்குரிய பதவிப்பெயர் என்பது போடி கல்வெட்டு என்னும் பாடற் பகுதியின் மூலம் தெளிவாகின்றது.

மட்டக்களப்பு முஸ்லிம்களுடைய நாட்டுப் பாடல்களிலும் வன்னிமை பற்றிய குறிப்புகள் உள்ளமை கவனித்தற்குரியது. அப்பிராந்தியத்து வன்னிபம் ஒருவனைப் பற்றி மேல்வரும் பாடற்பகுதியுண்டு.

"கண்டி நகர் காலி, மாத்தறை
காவல் கண்டீர் நாகபட்டினம்
தொண்டியூர் திரு ஏரியா
திருகோணமலைச் சேரியும்
வண்டுலாவிய கிண்ணியா
வதுவிநாடறிய சதுராசிமலை
எங்கும் எங்குமே அவர் புகழ்
எங்கும் எங்குமே துதிக்க
சீர்புகழ் செழித்த மன்னவர்
தென்பகுதிக் கிழக்கு
சிங்க மகாராசா வன்னுமை
பார்புகழ் மீராலெவ்வைப்போடி வன்னுமை
நாலுதிக்கும் பிரபல்யமாகினார்
சீர்புகழ் செழித்த மன்னவர்"

இந்தப் பாடல் மீராலெவ்வை என்ற பெயருடைய வன்னிபம் பற்றியதாகும். வன்னிபத்தைப்போடி என்றும் பாடல் குறிப்பிடுகின்றது. சிங்கமகாராசா வன்னுமை என்பது பாட்டுடைத் தலைவனுக்குரிய பட்டப் பெயர் போலும். அவரைப் பற்றித் தென்பகுதிக் கிழக்கு என்னும் அடைமொழி காணப படுவதால் மீராலெவ்வை மட்டக்களப்புத் தேசத்தின் தென்பகுதியிலே அதிகாரம் செலுத்திய வன்னிபமாதல் வேண்டும். கண்டி, காலி, திருகோணமலை, நாகபட்டினம், தொண்டியூர் முதலிய நகரங்களிலேயே வன்னிமையின் புகழ் பரவியுள்ளது என்று சொல்லப்படுவதால், வணிகர் குழாம் ஒன்றின் மத்தியில் இப்பாடல் வழங்கி வந்தது என்று கொள்ளலாம். பாடலின் எஞ்சிய பாகத்திலே அறுபத்துமூன்று வண்டில், நூற்று இருபத்தாறு மாடுகள் என்பனவும் கூறப்படுகின்றன. கூட்டம் கூட்டமாக மாட்டு வண்டிகளிலே பொருள்களை நெடுந்தூரம் ஏற்றிச்செல்லும் காலங்களில் இப் பாடலைப் பாடினார்கள் என்று கருதுவதற்கு இடமுண்டு.

இருபதாம் நூற்றாண்டிலும் வன்னிபம் என்னும் பதவிப்பெயர் வழக்கில் இருந்தது. அது ஒரு மாவட்டத்தில் உள்ள காரியதிகாரிப். பிரிவின் அதிபருக்குரிய பதவிப்பெயராக அமைந்திருந்தது. 1908ஆம் ஆண்டிலே உள்நாட்டுத் தலைமைக்காரரின் மாநாடுகளைக் கூட்டுவது என்றும், கரையோரச் சிங்களவர், கண்டிச் சிங்களவர், இலங்கைத் தமிழர் ஆகியோரின் தலைமைக்காரரைத் தனித்தனியாகக் கூட்டங்களுக்கு அழைப்பது என்றும் அரசாங்கம் தீர்மானித்தது. இம்மாநாடுகள் பிரதேசவாரியாக 3 தடவைகள் நடைபெற்றன. அவற்றுள் முதலாவது கூட்டம் 1908ல் கொழும்பில் நடைபெற்றது. மண்முனை வடக்கு வன்னிபம் பி.சீ.ஜீ. கனகசபை, மண்முனை தெற்கு வன்னிபம் ஸீ. கோணமலை, எருவில் வன்னிபம் சீ. சீ. அழகக்கோன் ஆகியோரும் அங்கே பிரசன்னமாயிருந்தார்கள்.

1912 இல் மட்டக்களப்பிற் கூடிய சபையிலே கொட்டியாரம்பற்று வன்னிபம் D துரையப்பா, பாணமைபற்று வன்னிபம் G.H. கனசபை, ஏறாவூர் கோறளைப்பற்று வன்னிபம் A. K காரியப்பர், கரவாகுபற்று வன்னிபம் S.W சின்னத்தம்பி, சம்மாந்துறைப்பற்று வன்னிபம் A.L காரியப்பர் ஆகியோரும் பிரசன்னமாயிருந்தார்கள்.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## பாதுகாப்பு தீவிரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்காப் படையினரின் கண் காணிப்பு நடவடிக்கைகள் பலப் படுத்தப்படுள்ளன. மட்டக்களப்பு நகர் உட்பட பிரதான வீதிகளில் ஆயுதம் தாங்கிய படையினர் இரவு பகல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் அமைப் புக்குள் ஏற்பட்டுள்ள பிணக்கை யடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுள்ளதாக இரா ணுவ வட்டாரங்கள் தெரிவித் தன. (த)

## வாழைச் செய்கை பாதிப்பு

(இணுவில்)

இணுவில், மருதனார்மடம், உரும்பிராய் போன்ற இடங்களில் வாழைகள் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளன.

தற்போது நிலவும் வரட்சி காரணமாக குருத்தடைப்பு , இலைக் கருக்கல், சிறிய குலை போடுதல், மஞ்சள் இலை போன்ற நோய்கள ஏற்பட்டுள்ளன.

சந்தையில் வாழைப்பழத்தின் விலையும் குறைவாக உள்ள தாகவும் விவசாயிகள் கவலை கொண்டுள்ளனர். (து-122)

## குடும்பஸ்தர் மரணம்

(மருதங்கேணி)

நீர் வெறுப்பு நோய்த்தாக்கத் திற்குள்ளான நிலையில் கிளி நொச்சி மாவட்ட வைததியசாலை யில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ் தர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை மரணமானார்.

கடந்த ஜனவரி மாதம் இரண் டாம் திகதியன்று நாயினால் கடியுண்ட மேற்படி நபர் அதற்கான வைத்திய நடைமுறைகளை உரிய நேரத் தில் மேற்கொள்ளத் தவறியத னாலேயே இம் மரணம் சம்பவித் துள்ளதென வைத்தியசாலை வட டாரங்கள் தெரிவித்துள்ளன.

கண்டாவளையைச் சேர்ந்த கா. குமராசாமி( வயது -52) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு மரண மானார். (து-35)

## கால்நடைகளை கட்டி வளர்க்குக

(இணுவில்)

ஆடு, மாடுகளை கட்டி வளர்க் கும்படி உடுவில் விவசாயிகள் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இப்பகுதி விவசாயிகள் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்கவுள்ள தால், மக்கள் தங்கள் கால்நடை களை கட்டிவளர்க்கும்படி சம்மே ளனம் அறிவித்துள்ளது.

அப்பகுதியில் கட்டாக்காலி ஆடு,மாடுகள் காணப்பட்டால் அவை பிடிக்கப்பட்டு குற்றப்பணம் அறவிடப்படும். அது கட்டத்தவறி உரிமை கோரப்படாவிட்டால் ஏலத்தில் விற்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது. (து-122)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக்கழக தேசிய நூலகத் தகவல் விஞ் ஞான நிறுவனத்தினர் ஆசிரியர் களுக்கான கற்கை நெறி யினை எதிர்வரும் யூன் மாதம் ஆரம் பிக்கவுள்ளனர்.

இங்கு முழுநேர கற்கை நெறி யைத் தொடரும் ஆசிரியர்களுக்கு சம்பளத்துடன் கற்றை விடுமுறை வழங்கப்படும் என்றும, இக் கற்கை நெறியைத் தொடர விரும்பும் யாழ். கல்வி வலயப் பாடசாலை களின் ஆசிரியர்கள் கொழும்பு சிரேஷ்ட உதவிப் பதிவாளர் க. கணபதிப்பிள்ளையுடன் (011-2507150) என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொண்டு, தமது விண்ணப்பங்களை எதிர் வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக் னேஸ்வரன் அறிவித்துள்ளார். (து-3)

## பயிற்சிபெறுவோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்படும் கணனிப் பயிற்சியில் பங்கு கொள்ள விரும்புவோரை நாளை சனிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு கொட்டடி சனசமூக நிலைய கலையரங்கிற்கு சமுகமளிக்கு மாறு கொட்டடி கிராம அபிவிருத் திச் சங்க நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. (து)

## 3582பேர் சிகிச்சை

(கிளிநொச்சி)

முள்ளியவளை அரசினர் வைத் தியசாலையில் கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆயிரத்து 582 நோயா ளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக மேற்படி வைத்தியசாலையின் கடந்த மாத நிலவர அறிக்கை தெரிவிக்கிறது.

மேற்படி அறிக்கையில் வெளி நோயாளர் பிரிவில் 2 ஆயிரத்து 652 பேரும், சிரங்குக்காக396 பேரும், குருதிச் சோகையினால் 171பேரும், சாதாரண காய்ச்சலி னால்167பேரும், மலேரியாக் காய்ச் சலினால் 47பேரும், வயிற்றோட் டத்திற்காக 29பேரும், சிறு சத்திர சிகிச்சைக்காக 69 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும மகப்பேற்றுக காக 36 கர்ப்பிணிகள் அனுமதிக் கப்பட்டு அதில் 15 சிசுப்பிறப்பு இடம்பெற்றுள்ளது என்றும் தெரிவிக் கப்பட் டிருக்கிறது. (து-35)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் சிவகாமி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24ஆம்திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்களுக்கு இடம் பெறவுள்ளது.

மஹோற்சவ பிரதமகுரு "வேத சிவாகம கிரியாரத்தினம்" சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள் தலைமையில் இடம் பெறவுள்ள உற்சவத்தில் விசேட பூசை ஆராத னைகளும் இடம்பெறும். (து-4)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மறை மாவட்ட பாதுகா வலன் பத்திரிகையும், சமூகத் தொடர்புஆணைக்குழுவும் இணைந்து நடாத்தும்" ஊடகவிய லுக்கு ஒரு அறிமுகம்" என்ற தலைப்பிலான பயிற்சிப்பட்டறை நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது.

யாழ். மறைகல்வி நடுநிலை யத்தில் இரு நாட்களுக்கு இடம் பெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறை யில் தகுதி வாய்ந்தவர்களால ஊடகத்துறைப்பற்றிய விளங்கங் கள் வழங்கப்படும். (து-4)

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை புனித சூசையப்பர் வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ். ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் பிரதம அதிதி யாகக் கலந்து கொண்டு கட்டடத் தைத் திறந்து வைப்பார். (து-3)

## பத்திரிகைகள் விற்கத் தடை

(மட்டக்களப்பு)

கொழும்பில் இருந்து வெளி வரும் இரண்டு தேசிய பத்திரிகை கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் விற்பனை செய்யக்கூடாது என இனந்தெரியாதோரால் பத்திரிகை விற்பனை செய்யும் முகவர் களுக்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை அடுத்தே, அப்பத்திரிகைகளின் காரியாலயங்களுக்கும், பத்திரி கையை எடுத்துச் சென்று விநி யோகிக்கும் வாகன உரிமையாளர் களுகும் தொலைபேசி மூலமும் நேரடியாகவும் அச்சுறுத்தல் விடுக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

# ஸ்பெயின் ரயில் குண்டுத் தாக்குதல்

## 6 பேர் அடையாளம் காணப்பட்டனர்

கடந்தவாரம் ஸ்பெயின் தலைநகர் மாட்றிட்டில் பேரழிவை ஏற்படுத்திய குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்கள் என்று ஸ்பானிஷ் காவல்த்துறை கருதிய ஆறு பேரை அந்தக் காவலத துறை அடையாளம் கண்டிருப் பதாக செய்திகள் கூறுகின்றன.

இந்தத் தாக்குதலில் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் ஈடுபாடு இருக்கலாம் என்பதற்கான சான்றுகள் அதிகாத்துவருவதாக ஸ்பானிஷ அதிகாாகள் நம்புவதாக ஸ்பானிஷ் செய திநிறுவனங்கள் கூறுகின்றன.

இந்தச் சந்தேக நபர்கள் மொறோக்கோ நாட்டவர்கள். அவர்களில் ஐவர் தேடப்பட்டு வருகிறார்கள். ஒருவர் நேரில் கண்டவர்கள் அளித்த சாட்சியததின் படி தடுத்துவைக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவருக்கும் அல்கெய்டா அமைப்புக்கும் தொடர்புகள் ஏதாவது உண்டா எனற சந்தேகத்தின் அடிப்படையில அவர் ஏற்கனவே விசாரிக்கப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இந்த ரயில் தாக்குதலுக்கும் சென்ற ஆண்டில் மொறோக்கோ நாட்டில் நாற்பத்தைந்து பேரைப் பலிவாங்கிய குண்டுத் தாக்குதலுக்கும் தொடர்பு ஏதும் உண்டா என்பதை விசாரித்து முடிவு செய்ய மொறோக்கோ அதிகாரிகள் இப்பொழுது ஸ்பானிஷ் காவல்த்துறையினருடன் ஒத்துழைத்து வருகிறார்கள்.

(து)


# ஐரோப்பாவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

ஸ்பெயின் தலைநகரான மாட்ரிட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களையடுத்து ஐரோப்பாவின் பாதுகாப்பு குறித்து ஆராய ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட கூட்டத்தைக் கூட்டுமாறு அயர்லாந்து அழைப்புவிடுத்துள்ளது.

ஸ்பெயினில் இடம்பெற்ற தாக்குதலையடுத்து ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் இவ்வகையான தாக்குதல்கள் இடம்பெறலாமென அஞ்சப்படுவதால்பயங்கரவாதத்தைக் கூட்டாக எதிர்ப்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் ஆராய வேண்டுமென்பதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஓர் அம்சமாக ஐரோப்பிய ஒன்றிய நகல் அரசியல் யாப்பில் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் ஏற்பாடுசேர்க்கப்படவேண்டும் என அயர்லாந்து தெரிவித்துள்ளது.

(து)



ஹாங்காங் காவல்துறையினர், ரோபோக்களைக் கொண்டு குற்ற நடவடிக்கைகளை தடுக்கும் விதத்தில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வகுப்புகளை நடத்தி வருகின்றனர். ஹாங்காங்கில் உள்ள துவக்கப் பள்ளி ஒன்றில் சிறுவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் ரோபோ.

# பாகிஸ்தான் அணுவாயுத விவகாரம் அமெ.உடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது

(புதுடில்லி)

பாகிஸ்தானிலிருந்து அணுவாயுதத் தகவல்களை இரகசியமாக வெளியிட்ட வலைப்பின்னல் அமைப்பைச் சேர்ந்த நபர்கள் அனைவரும் பூண்டோடு அகற்றப்படவேண்டு மென்று அமெரிக்க அரசுத்துறைச் செயலர் கொலின் பவல் கூறியுள்ளார்.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில இந்திய வெளியுறவுத் துறையமைச்சர் யஸ்வந் சிங்ஹாவைச் சந்திதத பின் செய்தியாளர்களிடம் பேசிய கொலின்பவல் பாகிஸ்தானின் பிரதான அணு விஞ்ஞானியான அப்துல கதிர்கானிடமிருந்து தரப்பட்ட தகவல்கள் பலவற்றை பாகிஸ்தானிய அதிகாரிகள் தற்போது அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்வதாகத் தெரிவித்தார்.

டாக்டர் கதிர்கான் அணு இரகசியங்களைப் பிற நாடுகளோடு பகர்ந்து கொண்டதாகக் கடந்த மாதம வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருந்தார்.

ஈரான்,லிபியா, வடகொரியா முதலிய நாடுகளுக்கு அவர் இந்த இரகசியங்களை வெளியிட்டிருக்கக் கூடும் என்று கருதப்பட்டது.

(து)

# சீனாவில் மரணதண்டனை

## வீதிப்பை குறைக்கும் படி சிபார்சு

(பெய்ஜிங்)

சீனாவில் ஆண்டுக்கு சுமார் 10 ஆயிரம் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கித் தண்டனையை உடனடியாக நிறைவேற்று வதாகச சீன நாடாளுமன்ற பிரதிநிதி சென் ஜெங்ஜின் கூறியிருக்கிறார்.

இந்த எண்ணிக்கை நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகளும் அறிஞர்களும் சேர்ந்து தயாரித்த மதிப பீடு என அவர் குறிப்பிட்டார்.

சீனாவின் அதியுயர் நீதி மன்றமான மக்கள் உச்ச நீதிமன் றத்தின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் இந்தக் கணிப்பை உறுதி செய்ய மறுத்துவிட்டார்.

மரணதண்டனை வழங்கு வதைக குறைக்கும் படிசீனாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் லுலோகல்க் சென்றவாரம் மாகாண நிர்வாகிகளிடம் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (து)

# ஹெயிட்டியில் இடைக்கால ஆட்சி

அண்மையில ஹெயிட்டியல இடைக்கால ஆட்சி உருவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்காலப் பிரதமர் தனது அமைச்சு உறுப்பினர்கள் விபரங்களை நேற்று அறிவித்தார்.

இதேவேளை, ஹெயிட்டியில் இடைக்கால ஆட்சி உருவாகியுள்ளதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ள அமெரிக்கப் படையினர் ,தீவிர வாதிகளை இனங் கண்டு அறியும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

தீவிரவாதிகள் மறைந்து வாழும் அச்சம் தரும் குகைப் பகுதி ஒன்றும் அமெரிக்கப் படைகளால் சுற்றி வளைக்கப்பட்டது. (து-60,10)

# ஸ்டிங்கர் ஏவுகணைகள் தயார் நிலையில்

## தேர்தலையொட்டிய முன்னேற்பாடு

(தைபே)

தாய்வானில் மார்ச் மாதம் 20 ஆம திகதி அதிபர் தேர்தல் நடைபெற வுள்ளது. அதையொட்டி பாதுகாப்புக்காக விமான எதிர்ப்பு ஏவுகணைகளைச செலுத்தும் வாகனங்கள் தலைநகர் தைபேயில 12 இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளன.

தனக்குச் சொந்தமான பகுதியே தாய்வான் எனக்கூறி வரும் சீனா, தாய்வானை நோக்கி 500 ஏவுகணைகளை நிறுத்தி வைத்திருக்கிறது. அத்தோடு தேர்தலை ஒட்டி வன்முறை வெடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே தான் ,எவ்வித ஆபத்துக்களையும் சமாளிக்கும் வகையில் ஸ்டிங்கர் ஏவுகணைகளைத் தாய்வான் அரசு தயார் நிலையில் வைத்திருக்கிறது. (து)



ஜெர்மன் நாட்டின் உச்ச நீதிமன்ற வாசலில், தங்கள் இனத்தைப் பற்றிய வழக்கின் தீர்ப்பை அறிய ஆவலுடன் காத்து நிற்கிறது அனஸ்தாஷியா (4) என்ற புல் டெரியர் வகை நாய். வேட்டை நாய்களை இனப்பெருக்கம் செய்யக்கூடாது. ஆனால் அவற்றை இறக்குமதி செய்வதற்கான தடை நீக்கப்படுகிறது என்று உச்ச நீதிமன்ற நீதிபதி கடந்த செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தார்

# மக்கள் ஆர்ப்பாட்டம்

வெனிசுலாவின் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து இடம் பெற்று வருகிறது.

வீதி ஆர்ப்பட்டமாக ஆரம் பித்த இந்தப்போராட்டம் தற்போது நீதி மன்றம் வரை சென்றுள்ளது.

தமது கோரிக்கைக்கான இத் தீர்ப்பை நியாயமான முறையில் வழங்குமாறு ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோா வெனிசுலா உச்ச நீதிமன்றைக் கேட்டுள்ளார்கள்.

மக்கள் போராட்டத்தில் இருந்து சட்ட ரீதியான எதிர்ப்புப் போராட்டத்தை வெனிசுலா ஜனாதிபதி தற்போது சந்திக்கின்றார் என்பதும், ஜனாதிபதிக்கு எதிராக எட்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (து-10)

# காஷ்மீர் பிரச்சினையே பிரதான பிரச்சினை

## பாக்.வலியுறுத்தல்

(இஸ்லாமாபாத்)

இந்தியா-பாகிஸ்தான் இடையிலான பிரச்சினைகளில் பிரதானமானது காஷ்மீர் பிரச்சினைதான் என்று பாகிஸ்தான் மீண்டும் வலியுறுத்திக் கூறியிருக்கிறது.

இரு தினங்களுக்கு முன் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஸாரப் இந்தியா ருடே கருத்தரங்கில் நிகழ்த்திய உரைக்குத் தவறான விளக்கத்தை இந்தியா அளித்துள்ளது என்று பாகிஸ்தான் கடந்த திங்கட்கிழமை புகார் கூறியிருக்கிறது.

காஷ்மீப் பிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினை களுக்கும் அமைதியான முறை யில் தீர்வு காணவேண்டுமென்ற தமது உறுதியைத்தான் அந்த உரையில் முஷாரப் மீண்டும் வலியுறுத்தியுளளார் என்றும் பாகிஸ்தான் தெரிவித்திருக்கிறது.

பாக்.அதிபரின் பேச்சுக்குறித்து இந்திய வெளியுறவுத் துறை தெரிவித்துள்ள கருத்துக்கள் வருத்தத்துக்குரியன என்று பாக்.வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர் பாளா இஸ்லாமபாத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இரண்டு தினங்களுக்கு முன் நடைபெற்ற“இந்தியா ருடே” கருத்தரங்கில்முஷாரப்பின் உரை இடம் பெற்றது.

அதில் பயங்கரவாதம்,காஷ்மீர் பரச்சினை குறித்தும் இந்திய-பாகிஸ்தான் உறவு குறித்தும், ஜனவரி 6ம் திகதி முஷாரப்பும் பிரதமர் வாஜபாயும் வெளியிட்ட கூட்டறிக்கை குறித்தும் அவர் பேசினார்.

காஷ்மீர் பிரச்சினையே பிரதானமானது என்று கூட்டறிக்கையில் குறிப்பிட்டு இருப்பதாக முஷாரப் கூறுவது தவறானது. கூட்டறிக்கையின் வாசகங்களுக்கு ஒருதலைப் பட்சமாக விளக்கம் அளிப்பது இரு தரபபுக்கும் இடையே நம்பிககையை ஏற்படுத்தவும் உதவாது; சமாதான முன்முயற்சியை முன் னெடுத்துச் செல்லவும் உதவாது என்று முஷாரப்பின் பேச்சை இந்திய வெளியுறவுத் துறை கடுமையாக விமர்சித்திருந்தது.

தன் மீதான தாக்குதலை பயங்கரவாதம் என்று கூறும் முஷாரப், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நடக்கும் பயங்கரவாதச் செயல்களை விடுதலைப்போர் என்று வர்ணிக்கிறார் என்றும் இந்தியா கண்டித்திருந்தது அதற்குப் பதிலளிக்கும் வகையில், மேற்கண்ட புகாரைக் கூறியிருககிறது பாகிஸ்தான் வெளியுறவுத்துறை.

காஷ்மீர் பிரச்சினையைப் பயங்கரவாதத்துடன் தொடர்பு படுத்திப் பேசுவது தவறானது என்று மீணடும் கூறியுள்ளது பாகிஸ்தான். அதே நேரத்தில்,பிரதமர் வாஜபாயும் முஷாரப்பும் ஜனவரி6-ல் தொடககி வைத்த சமாதான முன்முயற்சிகளைத் தொடர்ந்து முனனெடுத்து செல்ல பாகிஸ்தான் உறுதி பூண்டுள்ளது என்றும் செய்தித்தொடர்பாளர் மசூத்கான் தொடர்ந்து கூறினார்.

(து)

# பழங்குடியினர் பகுதியில் பயங்கரவாதிகள் வெளியேற்றும் நடவடிக்கையில் பாக்.இராணுவம்

ஆப்கானிஸ்தானையொட்டிய பாகிஸ்தான் எல்லைப்புறப் பிரதேசத்தில் அல்கெய்டா மற்றும் தலிபான தீவிரவாதிகளை ஆதரிப்பதாகச் சந்தேகிககப்படும் பழங்குடியினருடன் மாதக் கணக்கில் நடந்த பயங்கரமான மோதலில் 4 பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

தெற்குப் பிரதேசத்தில் இருக்கும் ஒதுக்குப் புறமான சுயாட்சி பெற்ற பழங்குடியினர் பகுதிகளில் பல நூற்றுக்கணக்கான பயங்கரவாதிகள் பதுங்கியிருக்கக் கூடுமென்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார். அவர்களை வெளியேற்றுவதில் தாம் உறுதியோடு இருப்பதாகவும் முஷாரப் தெரிவித்துள்ளார். ஆனால் இந்தச் சண்டை ஒரு தேக்க நிலையில் முடிந்ததாக வும் தேடப்பட்ட நபர்கள் யாராவது பிடிபட்டார்களா என்பது பற்றித் தெளிவாகத் தெரியவில்லை என்றும் உளளூர் ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்,

அடுத்த பக்கத்தில் பாகிஸ்தானின் எல்லைப்புறப் பிரதேசத்தில் அமெரிக்கப் படைகள் இதே போன்றதொரு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

அல்கெய்டா அமைப்பின் தலைவரான ஒஸாமா பின்லேடனை பிடிக்கும் முயற்சிகளை வேகப்படுத்தியிருப்பதாக அமெரிக்கா தெரிவிக்கும் தகவல்களை அமெரிக்க இராணுவத துறை அதிகாரிகள் அடக்கியே வாசிக்கிறார்கள்.

(து)

# உள்ளத்தால் நாம் உயர்ந்தால் உண்மை வாழ்விலும் உயரலாம்

வெள்ளி நற்சிந்தனை

உலகியல் வாழ்வில் நாம் எல்லோரும் உயர்வடைய வேண்டு



மென்றே கருதுகின்றோம். ஆனால் நம்மில் ஒரு சிலரே உயர்வடை கின்றனர். இதற்குக் காரணம் எண்ணத்தால் மட்டுமன்றி, சிந்தனை வழிச் செயற்பாடுகளாலும் நம்மை நாம் வழிப்படுத்தாமையேயாகும்.

உலகிலே படிப்பினால் உயர்ந தோர், பணத்தினால் உயர்ந்தோர், குலநலன்களால் உயர்ந்தோர் யாருமே உலகம் போற்றும் உத்தமர்களாக உயர்வடைய முடியாதுள்ளனர். உண்மையில் உலகம் போற்றும் உத்தமர்களாக உயர்வடைவதற்கு ஒரேவழி உள்ளத்தால் உயர்வடைதலேயாகும்.

வள்ளுவப் பெருந்தகையார் இதனை அழகாக **'மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு'** எனக் கூறியுள்ளார்.

## ஆசைகளைக்கட்டுப் படுத்தவேண்டும்

உள்ளத்தால் உயர்வடைவதாயின் உள்ளத்தை எப்படி வைத்திருக்கவேண்டும். உள்ளபடி உள்ளத்தை உயர்வாக வைத்திருபபதாயின் உள்ளத்தில் ஏற்படும ஆசைகளைக் கட்டுபபடுத்த வேண்டியது அவசியமாகும். ஆசை நிறைந்த உள்ளத்தில் நல்ல சிந்தனைகள், நல்ல எண்ணச் செயற்பாடுகள் ஏற்படமாட்டாது. ஆசை கொண்ட உள்ளம் கோபம், பொறாமை, பகைமை உணர்வு, பாவ உணர்வுகள் நிரம்பியதாக மாறிவிடும். ஆசை கொண்ட உளளம் அல்லல் பல விளையும் இல்லமாக எம்முள்ளே இருந்து உயர்விற்கு இடம்கொடாதிருக்கும்.

உலகியல் வாழ்விலே ஆசை மிக உடையவர்களை விலங்குகளாகவும் அன்பு மிக உடையவர்களை மனிதர்களாகவும், அன்பும், அருளும் மிக உடையவர்களை தேவர்களாகவும் ஆன்றோர் வகுத்துள்ளனர். இதனையே வள்ளுவப் பெருந்தகையும் மிக அழகாக **'அருள் சேர்ந்தநெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்'** என எடுத்துக் கூறியுள்ளார்.

## சுய நலம் கூடாது

உண்மையில் அன்பும் அருளும ஒருவர் உள்ளத்தில் நிறைந்திருப்பின் அவரின் சொல்லிலும், செயலிலும் சுயநலம் இருக்காது. பொது நலமே நிறைந்து காணப்படும். இவர்கள் தான் வாழ்வில் உயர்ந்தோராவார். பொன்னாலும், பொருளாலும், படிப்பினாலும், பதவியினாலும், குலத்தாலும், கொண்ட எந்த உயர்வும் நிலையாகாது. சிலநாள் உயர்ந்தோர்போற காட்டிச் சிதைத்து விடும் சிற்றாசை வலைப்பட்ட உள்ளங்கள் என்பதை மகான்கள் பலர் அறிவுபூர்வமாக உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளனர்.

எனவே உலகில் உயர்ந்தோராக வாழ நாம் ஒவ்வொருவரும் **'உள்ளத்தாற் பொய்யாதொழுகின் உலகத்தார் உள்ளத்தில் எல்லாமுகான'** என்னும் வள்ளுவன் கூற்றை எம உள்ளங்களில் உறுதியுடன் கொண்டு உயர்வாழ்வு வாழமுயல்வோம்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்

'தெள்ளத் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம்' எனவும்

**உடம்பெறும் மனையகத்து உள்ளமே தகளியாக மடம்படும்**

நீர்வைமணி

**உணர்நெய் அட்டி உளிரெனும் திரி மயக்கி இடம்படு ஞானத் தீயால் எரிகொளவிருந்து நோக்கிற் கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே** எனவும் வரும் அடிகள் உள்ளத்தை உள்ளபடி நல்லன கொண்டு அல்லன விலக்கிடப் பழக்கிக்கொண்டால் அதுவே உலகோர் வழிபடும் ஆலயத்திற்கு வழிகாட்டும் உயர் விடமாய்த் திகழும் என உணர்த்துவதைக் காணலாம். □


## சிறுவிளம்பரம்

### மணமகள் தேவை

கனடாவில் குடியுரிமை பெற்ற யாழ். இந்து வேளாளர், வயது 36 நட்சத்திரம் - ஆயிலியம் 3 ம் பாதம் லக்கணம் - துலாம் ராசி - கடகம் உயரம் 5 '2' நிறம் வெள்ளை, 8இல் செவ்வாய் தோஷமுடைய மணமகனுக்கு அழகான படித்த மணமகள் உடன்தேவை. மணமகன் கனடாவில் இருந்து லீவில் வந்துள்ளார். தொடர்புக்கு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம் ஸ்ரீவைகுந்த ஆச்சிரமம், 68/15 சட்டநாதர் வீதி (சமுர்த்தி வங்கி அருகாமை) நல்லூர், யாழ்ப்பாணம் Tel/Fax - 021- 222 2871

(8450)


## மின் விளக்கு பழுது


(நவாலி)

யாழ்ப்பாணம - காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள குளப்பிட்டிச் சந்தியில் பொருத்தப் பட்டிருந்த வீதி விளக்குப் பழுதடைந்து விட்டது.

இதனால் இச்சந்திப்பகுதி இரவு நேரங்களில் இருளில் மூழ்கிக் காணப்படுகிறது. இதன் காரணமாக இரவுநேர வீதி விபத்துக்கள் ஏற்படும் அபாயமும, திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறக்கூடிய அபாயமும் உருவாகியுள்ளது.

எனவே இவ்வீதி விளக்கினை திருத்தம் செய்து மீண்டும் ஒளிரச் செய்யுமாறு அப்பகுதி மக்கள் இலங்கை மின்சார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(து-102)



இந்தியா வந்த அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின்பவல், புதுடில்லியில் பிரதமர் வாஜ்பாயை சந்தித்துப் பேசியபோது, இருதரப்பு உறவுகள் பிராந்திய, மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் 40 நிமிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## மார்க்ஸிஸ க.கட்சியின் தேர்தல் அறிக்கை

வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கை, விவசாயத் தொழிலாளர் நலனுக்காக மத்திய சட்டம் ஆகிய அம்சங்கள் நேற்று முன் தினம் டில்லியில் வெளியிடப்பட்ட மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதன் பொதுச் செயலாளர் ஹர்ஜஸன்சிங் சுர்ஜித் இந்த அறிக்கையை வெளியிட்டார்.

வேலை நிறுத்த உரிமையை அடிப்படை உரிமையாகவும் குறைந்தபட்ச ஊதியத்துக்கு உத்தரவாதம் அளிக்கவும் இந்த தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. (து)

## கர்நாடகத்தில் பா.ஜ.க. தனித்துப் போட்டியிடும்

(ஹைதராபாத்)

வரும் மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி 350க்கும் மேற்பட்ட இடங்களில் போட்டியிடும் என்று அதன் தலைவர் வெங்கையநாயுடு தெரிவித்திருக்கிறார்.

ஹைதராபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 23 ஆம் திகதிக்குள் கூட்டணி பற்றியும், போட்டியிடும் இடங்கள் குறித்தும் பாரதிய ஜனதா இறுதி முடிவு எடுக்கும் என்றார்.

கர்நாடகத்தில் பா.ஜ.க.தனித்துப் போட்டியிட முடிவு செய்திருப்பதாகக் கூறிய அவர்,கர்நாடகத்தில் அ.இ.அ.தி.மு.கவுடன் தேர்தல் கூட்டணி இல்லையென்றபோதிலும் அந்தக் கட்சி கேட்கும் சில தொகுதிகள் பற்றி உரிய நேரத்தில் முடிவு செய்யப்படுமென்றார்.

இதனிடையே ஆந்திரப் பிரதேசத்தில் 42 மக்களவைத் தொகுதிகளில் 9 தொகுதிகளையும் 294 சட்ட மன்றத் தொகுதிகளில் 27 தொகுதிகளையும் பா.ஜ.கவுக்கு ஒதுக்குவது என்று அந்தக் கட்சிக்கும் தெலுங்கு தேசம் கட்சிக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து ஹைதராபாத்தில் நடை பெற்ற பேச்சுக்களையடுத்து, தெலுங்கு தேசக் கட்சித்தலைவர் சந்திரபாபு நாயுடுவும் பா.ஜ.க. செயலாளர் பிரமோத் மஹாஜனும் இதைச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள். (து)

## பா.ஜ.க.வின் கொள்கைகளை சோனியா காந்தி சாடல்

(சூரத்)

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் தவறான கொள்கைகளால் தான் வேலை வாய்ப்பின்மை, விலைவாசி உயர்வு, குடிநீர்ப் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குற்றஞ் சாட்டியுள்ளார்.

குஜராத் மாநிலம் சூரத் மாவட்டத்தில் தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசிய அவர், அன்றாடம் உபயோகிக்கும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் வீட்டுப பொருட்புக்களைக் கவனிக்கும் பெண்களுக்குத்தான் பெருஞ் சுமையாகவுள்ளது எனக் குறிப்பிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வாஜ்பாய் அரசின் மீது மக்களின் நல்லெண்ணம் நிலவுவதாகக் கூறுவது பா.ஜ.கட்சியினர் உருவாக்கிய கட்டுக்கதை என்று குறிப்பிட்டார். (து)

இந்தியச் செய்திகள்

## இந்துத்துவக் கட்சிக்கே ஆதரவு

(சென்னை)

இந்துகளின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்கும் கட்சிகளையும் வேட்பாளர்களையும் மட்டுமே விஸ்வஹிந்து பரிஸத் ஆதரிக்கும் என்று அதன் பொதுச் செயலாளர் பிரவின் புஹாடியா தெரிவித்திருக்கிறார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,அயோத்தியில் ராமர் கோவில கட்டுவதற்கான சிற்பங்கள் செய்யும் பணி 60 சதவீதம் முடிவடைந்து விட்டதாகக் கூறினார்.

அமெரிக்காவைப் போல் இந்தியாவிலும் வெளிநாட்டவரை பிரதமராகவோ குடியரசுத் தலைவராகவோ வர அனுமதிக்கக் கூடாது என்று அவர் குறிப்பிட்டார். (து)



ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ மற்றும் பொள்ளாச்சி தொகுதி வேட்பாளர் சி.கிருஷ்ணன் சென்னையில் கடந்த செவ்வாயன்று தி.மு.க. தலைவர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

## தே.ஜ.கூட்டணிபற்றி அத்வானி பெருமிதம்

(ஹைதராபாத்)

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகு மத்திய - மாநில அரசுக்கு இடையேயான உறவுகள் மேம்பட்டிருப்பதாக துணைப்பிரதமர் அத்வானி கூறியிருக்கிறார்.

"பாரத் உதய்" யாத்திரையின் எட்டாவது நாளில் அவர் ஹைதராபாத்தில் செய்தியாளர்களிடம் பேசினார்.

மத்திய - மாநில அரசுகள் ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும் என்பதிலும், ஒன்று இல்லாமல் மற்றொன்று செயற்பட முடியாது என்பதிலும் பாரதிய ஜனதா நம்பிக்கை கொண்டிருப்பதாக அத்வானி குறிப்பிட்டார்.

அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக அரசியல் சட்டத்தின் 356வது பிரிவை காங்கிரஸ் அரசுகள் பல முறை தவறாகப் பயன்படுத்தி மாநில அரசுகளைக் கலைத்திருப்பதாகக் குறிப்பிட்ட அவர், இத்தகைய அரசியல் நிர்ப்பந்தத்திலிருந்து மாநிலங்களை விடுவித்திருப்பது வாஜ்பாய் அரசுதான் என்றார்.

ஆந்திராவில் ஒலுங்கானா, மகராஷ்டிரத்தில் விதர்ப்பா ஆகிய மாநிலங்களை உருவாக்கும் கோரிக்கையை ஏற்க இயலாது என்றும் துணைப்பிரதமர் குறிப்பிட்டார். (து)

## இந்தியா - பாக் கிரிக்கெற்போட்டி தூரதர்ஷனில் நேரடி ஒளிபரப்பு

இந்தியா - பாக்கிஸ்தான் இடையேயான கிரிக்கெற் போட்டிகளின் நேரடி ஒளபரப்புவசதியை அடுத்த மாதம்15 ஆம திகதி வரை தூரதர்ஷனுக்கு வழங்குமாறு சென்போர்ட் நிறுவனத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி வி.என்.காரே தலைமையிலான உச்ச நீதிமன்றப் பிரிவு இந்த நேரடி ஒளிபரப்புக்காகத் தூரதர்ஷனன் ஏற் கெனவே செலுத்திய 10 கோடி ருபாயுடன் மேலும் 40 கோடி ருபாவை வைப்புத் தொகையாக நீதிமன்றத் திடம் செலுத்த வேண்டும் என்று உத்திரவிட்டுள்ளது.

போட்டியின் போது தனது விளம பரங்களை இடையே ஒளிபரப்பக் கூடாது என்று உத்தரவிட்ட நீதிபதிகள் சென்போர்ட் ஒளிபரப்பைப் போட்டி துவங்குவதற்கு அரைமணி நேரத்துக்கு முன்னரும் பின்னரும் ஒளிபரப்ப வேண்டுமென்றும் தூரதர்ஷனுக்கு ஆணையிட்டனர். (து)

# வடபகுதி முஸ்லிம்கள் தனிஅலகு கோர முடியாது

# தமிழர்களுடன் இணைந்து வாழ்வதே சாத்தியப்படும்

## முன்னாள் அமைச்சர் நூர்தீன் மர்சூத் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்ச் சகோதரர்களதும் தமிழீழ விடுதலைப்புலிகளதும் நிலைப்பாடுகளை அனுசரித்துப் போக வேண்டிய கடமை வடபகுதி முஸ்லிம்களுக்கு உண்டு. இதனை விட்டு விலகிவாழ்வதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஓர்விடயம். வடபகுதி முஸ்லிம்களும், தமிழர்களும் இணைந்து வாழ்வது மிகவும் அவசியமானது. எம்மைப் பிரிந்து போக விடுங்கள் என வடபகுதி முஸ்லிம்கள் தமிழர்களிடம் கோர முடியாது.

இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், வன்னி மாவட்ட முன்னாள் புனர்வாழ்வு அமைச்சருமான நூர்தீன் மர்சூத் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்பட்டு வரும் "விடியும் வேளை" நிகழ்ச்சித் தொடரில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடபகுதியில் உள்ள விகிதாசாரப்படி முஸ்லிம்கள் அங்கு தமக்கு என்ற ஒரு தனி அலகினைக் கோர முடியாது. இங்கு தமிழர்களுடன் முஸ்லிம்களும் இணைந்து வாழ்வதே சாத்தியமானது. இதனைக் கருத்தில் கொண்டே முஸ்லிம் காங்கிரஸின் தலைவரின் செயற்பாடுகள் அமைந்தன. இதன் அடிப்படையிலே தான் முஸ்லிம் காங்கிரஸ் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியது. இதை அரசாங்கமும், ஜனாதிபதியும், சர்வதேச சமூகத்தினரும் தற்பொழுது ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனை புலிகளும் ஏற்பார்கள் என நாம் நம்புகிறோம்.

முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கை உறுதி செய்யப்பட வேண்டும், பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கப்படவேண்டும், பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனைகளுடனேயே முஸ்லிம்காங்கிரஸ் ஐக்கிய தேசிய முன்னணியுடன் தற்பொழுது கூட்டை உருவாக்கியுள்ளது.

இந்தத் தேர்தல் கூட்டின் பிரகாரம் அடுத்து வரும் மக்களாணை பெற்று அரசை ஐக்கிய தேசிய முன்னணி அமைத்தால், எமது நிபந்தனைகள் உடனடியாகவே நிறைவேற்றப்படல் வேண்டும். இல்லாவிட்டால் ஐக்கிய தேசிய முன்னணியிற்கு வழங்கி வரும் எமது ஆதரவை நாம் முறித்துக் கொள்வோம்.

இந்த நிபந்தனைகளையும் நிலைப்பாட்டையும் ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் தெளிவுபடுத்துகிறது. முஸ்லிம் சமுகத்தின் எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டு பல தீர்க்கமான கொள்கைகளுடனேயே இந்தத் தேர்தல் கூட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் நாம் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கு எமது ஆதரவைத் தெரிவித்து வந்தோம். ஆனால் முஸ்லிம்களது நலன்கருதி நாம் விடுத்த கோரிக்கைகளை ஜனாதிபதி சந்திரிகா ஏற்காததால் அவரது உறவை நாம் முறித்துக் கொண்டோம்.

இத்தகைய ஒரு பிணக்கு மீண்டும் ஏற்படக் கூடாது என்பதற்காகவே இம் முறை நாம் செய்து கொண்ட கூட்டில் மிக இறுக்கமான நிபந்தனைகளை முன்வைத்துள்ளோம். இது முஸ்லிம்களுக்கு அதிக நன்மைகளைப் பயக்கும்.

### முஸ்லிம் காங்கிரஸின் பிளவு

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏறபட்ட சர்ச்சைகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர்,

முஸ்லிம்களின் ஏக பிரதிநிதிகளாக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இன்று பிளவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பிரிந்து சென்றவர்கள் மக்கள் ஐக்கிய சுதந்திரமுன்னணியில் இணைந்துள்ளனர். இந்தக்கூட்டு முஸ்லிம்களது உரிமைகளைப் பெற்றெடுக்க உதவும் என்பது சாத்திமற்றது.

ஜே.வி.பியினர் அங்கம் வகிக்கும் கட்சியாக இது உள்ளமையால், முஸ்லிம்களின் உரிமைகளை இக் கூட்டமைப்பு மதிக்கும் என நம்பமுடியாது. சமாதானத்தில் நம்பிக்கை இல்லாத இக்கட்சியுடனான கூட்டை எவருமே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

இவ்வாறு முஸ்லிம்காங்கிரஸ் தற்பொழுது பிளவுபட்டு நிற்பது முஸ்லிம்களின் பலத்தை குறைவடையச் செய்யும். எனவே, முஸ்லிம் காங்கிரஸின் தலைமையின் கீழ் அனைவரும் அணிதிரள வேண்டும். முஸ்லிம்களின் தலைவிதியை தீர்மானிக்கும் கட்சிக்கு தலைவராக இருப்பதற்கு ரவூப் ஹக்கமுக்கு மட்டுமே தகுதி உண்டு.

### தேர்தல் நிலைமை

அத்துடன், தற்போதைய தேர்தல் நிலைமைகள் பற்றித் தெரிவித்த மர்சூத்,

வடக்கு - கிழக்கில் தமது ஆயுதபலத்தினை நிருபித்துள்ள புலிகள், அரசியல் பலத்தையும் நிருபிப்பதற்காக இந்தத் தேர்தலை ஆதரிக்கிறார்கள். இதற்காக தமிழ்த் தலைவர்களின் கூட்டமைபபிற்கான ஆதரவை மக்களிடம் கோருகின்றனர். இதனால் அனைத்து மக்களும் வாக்களிக்கக் கூடியநிலை உருவாகியுள்ளது என்றார். (தி-60,64,4)

## ரத்ததானம்

(மருதங்கேணி)

தவக்காலத்தினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அண்மையில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய வண.யோசவ்வாஸ் இளையோர் மன்றத்தைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் தவக்கால ஒறுத்தல் நடவடிக்கையாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்கியுள்ளார்கள். (து-35)

# கருணாவின் பிரதேசவாதத்துக்கு

# கவிஞர் காசிஆனந்தன் கண்டனம்

மட்டககளப்பில் கருணாவினால் ஏற்படுத்தப்பட்ட பிரதேசவாதத்தைக் கண்டித்து தமிழ் நாட்டில் உள்ள கவிஞர் காசிஆனந்தன் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். தனி சொந்தக் கையெழுத்தில் எழுதிய அக் கடிதத்தை மட்டக்களப்பில் உள்ள செய்தி ஊடகங்கள், அரச அதிகாரிகளுக்கும் பல்வேறு தரப்பினருக்கும் மின் அஞ்சல் மூலமும், தொலை நகல் மூலமும் அனுப்பிவைத்துள்ளன.

அக் கடிதத்தின் விபரம் வருமாறு,

தமிழீழம் எங்கள் உயிர்மூச்சு. தமிழீழ மக்கள் 17 ஆயிரத்து 700ற்கு மேற்பட்ட மாவீரர்களை இழந்துள்ளனர். இவர்கள் மட்டக்களப்பிற்கான போரையோ? அன்றி யாழ்ப்பாணத்திற்கான போரையோ? நடத்தவில்லை. அவர்கள் தமிழீழத்திற்கான போரையே நடத்தினார்கள்.

தமிழீழத்தை, மட்டக்களப்பு என்றோ? யாழ்ப்பாணம் என்றோ? கூறுபோடுவதையும், தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவதையும் நான் எக்காலத்திலும் ஒப்புக் கொள்ளமாட்டேன். தமிழீழ மக்கள் தங்கள் கடைசி மூச்சிருக்கும் வரை, தமிழீழக் கொள்கைக் காகவே வாழ்வார்கள்.

அன்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி.நல்லையா முதன் முதலாக மட்டக்களப்பு என்னும் பிரதேசவாதத்தை முன்வைத்தார். அதனால் அவருக்கு சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து மந்திரிப் பதவி கிடைத்தது.

அதன் பின்னர் ஏ.டபிள்யூ தேவநாயகம் மட்டக்களப்பு என்னும் பிரதேசவாதத்தைத் தொடர்ந்தார். அதனால் அவருக்கும் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து மந்திரிப் பதவி கிடைத்தது.

பின்னர் இராசன் செல்வநாயகம் என்னும் அரசியல் அதிகாரி தனது உயர் பதவிக்காகப் பிரதேசவாதத்தைத் தொடர்ந்தார்.

அதைத் தொடர்ந்து செ.இராசதுரை வடக்கே காங்கேசன்துறை தொடக்கம, தெற்கே திருக்கோவில் வரை நமது தாயகம் என்று தொடக்க காலத்தில் முழங்கினார். கடைசியில் மட்டக்களப்பு என்னும் பிரதேச வாதத்தை முன்வைத்தார். அவருக்கும் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து மந்திரிப் பதவி கிடைத்தது.

மட்டக்களப்புப் பிரதேசவாதம் அத்துடன் நின்று போகவில்லை. அதற்கு முண்டு கொடுத்துத் தோள் தூக்கத் தமிழ்த் துரோகிகள் வந்து கொண்டே இருக்கிறார்கள்.

ஆனால், தமிழீழப் பெரு நெருப்பில் பிரதேசவாதம் எரிந்து சாம்பலாகி நெடுங்காலம் ஆகிவிட்டது.

இனிச் சாம்பலுக்கு உயிர் கொடுக்க முடியாது. (தி)

# இலங்கை சமாதான முயற்சிக்கு

# இந்தியா அனுசரணையே சிறந்தது

## ஜாதிக ஹெல தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏனைய நாடுகளின் அனுசரணையிலும் பார்க்க இந்தியாவின் ஆதரவு முக்கியமானதும் பொருத்தமானதும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பேச்சாளர் சங்கைக்குரிய பல கொடஞானதேரர் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், நோர்வேயின் அனுசரணைக்கு விருப்பம் தெரிவித்துள்ளன.

ஆனால் நோர்வேயின் அனுசரணையைவிட இந்தியாவின் அனுசரணையுடன் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றால் வெற்றியளிக்கும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த 2 வருடங்களாக ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமாதான நடவடிக்கைகளை நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுத்துச் சென்ற போது. அதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாது திணறியது.

அத்துடன், ஐக்கிய தேசிய முனனணி அரசாங்கம் சிறுபான்மையினத்தவர்களுக்கு அதிக நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் நடந்து கொண்டதாலேயே சமாதான முயற்சிகள் குழம்பின என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-60,10)

# லங்கா தீப ஆசிரியருக்கு தொலைபேசி மிரட்டல்

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச லங்காதீப பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சறிசிங்கவிற்கு தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்துள்ளதை சுதந்திர ஊடக இயக்கம் கண்டித்துள்ளது.

இது குறித்து ஊடக இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

அரசியல் வாதிகள் தொலைபேசியூடாக பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகையின் உள்ளடக்கப்பட்ட செய்திகள், விளம்பரங்கள் பற்றி அச்சுறுத்தல் விடுத்தால், அது சுதந்திரமான ஊடகத்துறையைப் பாதிப்பதாகும்.

அவ்வாறு ஏதாவது தவறாக பிரசுரிக்கப்பட்டிருப்பின், அரசியல் வாதிகள் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம் அல்லது பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவிடம் முறையிடலாம். தவிர பத்திரிகையாளர்களை மிரட்டுவதற்கு யாருக்கும் உரிமைகிடையாது.

தனது செயலுக்கு விமல் வீரவன்ச மன்னிப்பு கோரியிருக்கின்ற போதிலும், இது கண்டிக்கப்படத் தக்கது. ஊடக சுதந்திரத்தை மதித்து நடக்குமாறு பத்திரிகையாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதை நிறுத்துமாறு சகல அரசியற் கட்சித் தலைவர்களிடம் கேட்டுள்ளது. இதைவிட சிங்கள வார இதழ் ஆசிரியர் ஒருவருக்கு விடுக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தலையும் அண்மையில் தினக்குரல், வீரசேகரி பத்திரிகைகள் ஆயிரக்கணக்கானவை கிழக்கில் தீ வைத்து கொளுத்தப்பட்டதையும் இவ்வமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது. (தி-06)

# கருணாவின் யோசனைகளுக்கு

# ஏ.எல்.எம்.அதாவுல்லா வரவேற்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்பு எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் மேற்கொள்வதாயின், புதிய புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளவேண்டும் என முன்னாள் அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில்,

சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது, தற்போதுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு புதிய புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்படவேண்டும்.

அவ்வாறு புதிதாகச் செய்யப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்கள் தொடர்பான விடயங்களும் உள்ளடக்கப்படவேண்டும்.

இதேவேளை, தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வரும் அரசு புதிதாக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்வது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்றுள்ள கிழக்கு மாகாணத் தளபதி கருணாவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் வரவேற்கப்படவேண்டியது.

ஏனெனில், ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கும் - தமிழீழ விடுதலைபுலிகள் இயக்கத்திற்கும், இடையில் ஏற்கனவே செய்து கொளளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் பலகுறைபாடுகள் காணப்படுகின்றன.

அத்துடன், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்கள் தொடர்பான எந்த விடயங்களும் இதில் உள்ளடக்கப்படவில்லை.

எனவே, எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறும் எந்த அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், நடைமுறையில் உள்ள புரிந்துணர்வு உடனபடிக்கையை இரத்துச் செய்து விட்டு புதிய புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றார். (தி-61,10)

வெள்ளி முற்றம்

# கோடை மழை

அ.முத்துலிங்கம்

இலங்கை "மாப்பை" விரித்து வைத்து அதன் தலையில் யாழ்ப் பாணத்தைத் தேடிப்பிடித்து சிகப்புப் பென்சிலால் பெரியதொரு புள்ளி போட்டு "இது தான் கொக்குவில்" என்று பற்றிக்கொள்ளும அள விற்கு பிரபலமானதல்ல எங்களூர்.

ஆனால் மாப்பை எடுத்து பிரிக் காமல் பென்சிலால் கோடு இழுக் காமல் இது கொக்குவில் என்று சொல்லாமல் விடக்கூடிய அளவற்கு பிரபலமற்றது என்றும் கூறி விட முடியாது. அர்த்தநாரீசுவ்ரர் போன்று கொக்கு வில், ஒரு பக்கத்திலும் சாயாமல், தனித்து, தனக்கென்று ஒரு நாகரிகம் வைத்துக்கொண்டு இருப் பதாகத் தான் சொல்ல வேண்டும்.

கொக்குவில் என்றவுடன் சில ருக்கு 'கானா .சே " னாவின் கோடா போட்ட நல்ல பளபளப்பான நாட் டுப் புகையிலைச் சுருட்டு ஞாபகத்திற்கு வரலாம்; சிலருக்கு முறைப்படி காய்ச்சிய காரசாரமான கள்ளச் சாரயத்தின் நெடி நினைவுக்கு வரலாம். இது இரண்டிலும் அனு பவமில்லாத துர்ப்பாக்கியசாலிகள் பழைய பிரபல கொலைக் கேசுகள் சிலவற்றை ஞாபகத்திற்குக் கொண்டு வந்து அனுபவித்து ரசிக்கலாம்.

ஆனால் கொக்குவிலுக்கு விஜ யம் செய்த யாராவது அது மேற் கூறிய ஒன்றிலேதான் பிரபலமாயி ருக்கவேண்டும் என்று கூறினால் அவருக்கு கண் பார்வை "கிராமப் போன் பிளேட்டா அல்லது கிடாரச் சட்டியா" என்று வித்தியாசம் கண்டு பிடிக்கும் அளவிற்காவது இருக்குமா என்பது சந்தேகம் தான்.

ஒழுங்கைகளுக்குப்பேர் போனது கொக்குவில் அவற்றில் தான் எத்தனை ரகம்? வண்டிபபாதை, மணல் பாதை, மக்கிறோட்டு, கல்லு றோட்டு, முடுக் குத்தெரு, மூலைத் தெரு, குச்சு ஒழுங்கை, குறுணி ஒழுங்கை, ஒற் றையடிப்பாதை, ஒன்றரையடிப் பாதை இப்படியாக இன்னும் பலப்பல.

இப்படிப்பட்ட ஒழுங்கைகளோ புழுதிக்குப்பேர் போனவை. அது மாத்திரமா? பிறந்தநாள் தொடங்கி மேற்கூறிய ஒழுங்கைகளோடு பழகியவர்களையே சிற்சில சம யங்களில் இவை ஏய்த்து விடுவதும் உணடு. கொஞ்சம் அசந்து போனால் சரி பழைய படி புறப்பட்ட இடத் திற்கே கொண்டு போய்ச்சேர்க்கும். அசாத்திய திறமை படைத்தவை.

இந்த ஒழுங்கைகளில் சைக்கிள சவாரி செய்வதற்கு அபூர்வ பழக்கம் வேண்டும். கொக்குவிலைப் பிய்த் துக்கொண்டு போகும் கே.கே.எஸ். றோட்டில் இருந்து இறங்கிய ஒருவர் புகையிலைக்காம்பு நெட்டிபோல் பின்னிப்பின்னிக் கிடக்கும் இந்த ஒழுங்கைகள் வழியாக பிரயாணம் செய்து மறுபடியும் பலாலிறோட் டில் மிதிப்பாரானால் அவர் புறப் பட்ட முகூர்த்தத்தில் ஒரு சுவீப் டிக் கெட் எடுத்திருக்கலாம் என்று துணிந்து கூறலாம்.

இப்படிப்பட்ட கிராமத்தில் சுரம் வநதவனுடைய "டெம்பரேச்சர் சார்ட்" போல இடைக்கிடை ஏறி இறங்கும் நாகரிகத்தில் சமீபத்தில் கொழும் பில் இருந்து இறக்குமதி செய்யப் பட்ட நாகரிகமானது ஒரு திடீர் வளர்ச்சியை ஏற்படுத்தியிருக் கிறது. ஆனாலும் பொதுவாக பெண்களு டைய நாகரிகமானது, பின் னேரம் 4.00 மணியானதும் சேலையை களைந்துவிட்டு "கிமோனோ" அணிந்து படலைக் காலைப் பிடித் துக் கொண்டு நிற்பதும்,வெள்ளைக் கால் கந்தை யருடைய படலைய டியில் யாராவது "இளவட்டம் " சைக் கிளில் திரும்புவது தெரியத் தொடங் கும் போதே உள்ளே ஓடி ஒழிந்து கொள்வதும் என்ற அளவிற்கு வளர்ந்திருக்கிறது.

அவசர கால சமயத்தில் சட் டத்தை மீறி, மதகுகள் மீது குந்தி யபடியே அரட்டை அடிக்கும் ஆண் கள், அரைமயில் தூரத்தே பட்டா ளத்து 'வான்' முகப்பு லைட் மின் மினி போலத் தெரியும் போதே அந்தத் தியானமாகும் அளவிற்கு வீரமும் தைரியமும் படைத்திருந்தார்கள்.

குழந்தைகளைப்ப ற்றியோ கூறத் தேவையில்லை. கற்பத்தடை யைப் பற்றிய ஞாபகமே இல்லாமல் தாராளமாக பெற்றுப்போட்ட குழந் தைக் கணங்கள் ஒழுங்கைகள் எங்கும் நிறைந்திருக்கும்.

தாய்மார்களுடைய கையில் ஆறு மாதக் குழந்தை ஒன்று இருக்கும் போதே வயிற்றில் இரண்டு மாதத்தில் ஒன்று விண்ணப்பித்துக் கொண்டி ருக்கும் றெயில்வே லைன் கரை தான் குழந்தைகளுடைய விளையாட்டு மைதானம். தண்டவாளத்தின் மேல் வரிசையாக சோடா மூடியை அடுக்கி விட்டு 'யாழ்தேவி' வரும் போது ஒழித் திருந்து வேடிக்கை பார்ப் பதுடன் அவர்களுடைய ஆரம்ப விளை யாட்டு முடிவடைந்து விடும்.

கொக்குவிலுக்கு புதிதாக வரும் வாசகர்களுக்கு கொக்குவில் எங்கே ஆரம்பமாகிறது என்ற சந் தேகம் எழலாம். காலை 6.20றக்கு யாழ்ப் பாணத்தை விட்டு புறப்படும் கொழும் புப் புகைவண்டியில் பிர யாணம் செய்திருக்கும் அன்பர்கள் புகை வண்டி அடுத்துவரும் சுடலை ஒன்றை கடக்கும் போது நெடிது யர்ந்த பனைகளின் பின்னால் சுகா தார இன்ஸ்பெக்டரை நாளது வரை ஏய்த்துவந்த நூற்றுக் கணக் கான தலைப்பாகைகள் மிதப் பதைக் காணத்தவறியிருக்க மாட் டார்கள்.

சந்தேகமின்றி கொக்குவில் அங்கே தான் ஆரம்பமாகிறது. கொக்கு விலின் மேலான கைத்தொழில் சுருட்டுத்தொழில் தான் என்றாலும் சுருட்டுத்தொழில் செய்து பணக்கார ரானவர்களை விரல் விட்டு எண்ணு வதானால் கைகளே தேவையில்லை. கல்வியும் இதே நிலை தான்.



"கிளறிக்கல் " ஒவ்வொருத்தரு டையதும் மகோன்னதமான இலட் சியம். தட்டித்தவறி யாராவது ஒருத் தர் எஸ்.எஸ். சி. பாஸ் செய்து விட் டால் நல்லூர் கந்தசாமியாருக்கு ஒரு சங்கராச்சனை லாபம் எனறு அர்த்தம்.

ஆண்களின் கதியே இப்படி என் றால் பெண்களைப்பற்றிக்கூறவே தேவையில்லை. குறைந்தது 4 பிள் ளைகளுடன் விலாசதாருக்குக் கிடைக் காத வகையில் ஆங்கிலத் தில் தந்தி எழுதும் அளவிற்கு அவர் களுக்கு அமோகமான கல்வி அறிவு இருக்கிறது.

இருந்தும் என்ன? நாகரிக கண் கொண்டு பார்க்கும் பேர் வழிகள் கொக்குவிலின் பிரபலியத்தை மாத் திரம் எப்போதும் ஒப்புக்கொண்டதே கிடையாது.

★ ★ ★

சின்னாச்சிக் கிழவி, ஒன்றரை சஷ்டியப்த பூர்த்தி மதிக்கக்கூடிய தோற்றம்.எனினும் அந்த நாட்களில் ஆயிரம் புகையிலைக் கன்றுக்குப் பட்டை பிடித்த தேகக் கட்டு இன்ன மும் குலைநது விடவில்லை. தொழில் ஊர் வம்பு ; 'பார்ட் டைமாக' பலா விலை குத்தல். 'தொண தொணப்பு' நச்சரிப்பு, கருமித்தனம், 'பஞ்சம் கொட்டுதல்' போன்ற கிழவிகளுக்கு இயல்பான லட்சணங்களுக்குக் குறைவில்லை.

'கோச்சி வரும் கவனம்' எச் சரிக் கையை இலட்சியம் செய்யாமல் எதிரே வரும் ரயில்வே கடவையைக கடந்து இடது சந்தியில் திரும்பினால் 'இங்கு ஆர்மோனியத்தை ரிப்பேர் செய்யப்படும்' என்ற போர்டு பலகை ஒன்று பயங்கரமாகத் தமிழுக்கு ரிப்பேர் பார்த்தபடியே தொங்கும்.

அதற்கு எதிர்ப்புறம் ஒரு குச்சு ஒழுங்கை. பகல் 12.00மணிக்குக் கூட தனியாகப்போவதாக இருந்தால் நெஞ்சம் 'படக் படக்' என்று இடிக் கும். ஜனப் புழக்கம் இல்லாத படி யால் பாதை நடுவேஅங்கங்கே இக் கிரியும் நாகதாளியும் சுகம் விசா ரிக்கும்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மேலும் போனோம் என் றால் பிரமாண்டமான கள்ளி மரம் கொக்குவில் பசுக்களின் அன்றைய சந்ததி விருத்தியை உமல்களாகக் காய்த்து கணக்குக் காட்டிக் கொணடி ருக்கும்.

கைக்குட்டை வைத்திருப்ப வர்கள் ஒரு கையால் மூக்கிற்கு அபயம் அளித்த படி, மறுகையால் உயிரைப் பிடித் துக்கொண்டு, இன்னும் பத்தடி போவார்களானால் 'அட்டாளை முரு கேசர்' கொலை யுண்ட புனித ஸ்த லம் தென்படும். இந்த மேட்டு நிலத் தில் நின்று கிழக்குப்பக்கமாகப் பார்த்தால் தெரிவது தான் கிழவியின் பொத் தல் குடிசை.

ஆனால் இப்போது அங்கே இந்த வழியாகப் போக முடியாது. புளிய மர உரிமை வழக்கொன்றில் தாய்க் கும் பிள்ளைக்கும் ஏற்பட்ட தகரா றில் 'கவுண்மேந்து' தலையிட்டு குறுக்கு வேலி ஒன்று தற்காலிமாகப் போட்டிருப்பதால் , நேயர்கள் தயவு செய்து சிரமத்தைப் பாராது, வந்த வழி யில திரும்பி , கிழவி வழக் கமாகப்போகும் பிள்ளையார் கோவில் ஒழுங்கையால் வருவார்களாக!

எலக்சன் சீசனில் யாரோ ஒட்டி விட்ட நோட்டிஸ் ஒன்று இன்னமும் கிழவியின் படலையில் விசுவாசத் துடன் ஒட்டிக்கொண்டிருந்தது.

அந்தப்படலையை இழுத்துப் பிடித்தபடி பாறங்கல் ஒன்று, கையை விட்டவுடன் படலை படாரென்று சத் தததுடன் மோதிக்கொள்ளும் . ஆனால இதில் ஆச்சரியம் என்ன வென்றால் இதைத்தான் ஆங்கிலத் தில் ' ஆட்டோ மெட்டிக் ஷட்டர்" என்று கூறுவார்கள் என்பது கேவ லம், கிழவிக்கோ அல்லது பட லைக்கோ தெரியாது தான்!

சிறிது கடகடத்த அந்தப் படலை மீது நமக்கு இலகுவில் நம்பிக்கை பிறப்பதாகத் தெரியவில்லை. ஆனா படியால் கிழவி வழக்கமாகப் போகும் பொட்டுவழியாக நாமும் குனிந்து உள்ளே போவோம்.

சுளகு ஒன்றிலே ஒடியற் கிழங்கு காய்ந்து கொண்டிருக்கிறது. பக் கத்திலே ஈர்க்கிலே ஜம்மென்று குந்தியிருந்த பழமிளகாய் ஒன்று காக்கைகளையெல்லாம் விரட்டி யடித்துக்கொண்டிருக்கிறது. வாச லுக்கு கொஞ்சம் தள்ளி ஆடு கட் டியிருக்கிறது. பக்கத்தில் ஒரு உழ வாரப்பிடியும் கொஞ்சம் புல்லுக் கட்டும்.

ஆடோ ,உழவாரமோ புல்லைக் கவனிப்பதாகத் தெரியவில்லை.

அரைச்சாக்கு நெல்லு காயப் போடக்கூடிய அளவிற்கு ஒரு குந்து. அதை ஒட்டியபடி கிடக்கும் மண் சுவரில் கரிக் கணக்கு எழுதாத இட மாகப் பார்த்து, ஒரு திகதியில்லாத முருகன் கலண்டர், பரிதாபகரமா கத் தொங்குகிறது. வள்ளியம்மை தெய்வானையாருடை டிரஸைப் பார்த்த அளவில் "பொங்கு கை' பாஷன் பிரபலமாய் இருந்த காலத் தில் கலண்டர் அச்சாகியிருக்க வேண்டும் என்று தோன்றியது.

கிழவி ,கோடிப்பக்கத்தில் இறால் நோண்டிக்கொண்டிருந்தால் பக் கத்தில் இருபது வயது மதிக்கக் கூடிய இளைஞன் ஒருத்தன் சோகம் ததும்ப நின்று கொண்டிருந்தான்.

"எட பாவி! உன்னைப்பெத்த வயிறு நெருப்பாய் எரியு மேடா? எப் படித்தான் உனக்கு மனசு வந்தது."

'நான் என்னணை ஆச்சி செய்ய? கொழும்பிலை வேலை ஒன்றுக்குக் கட்டவேணும். அந்த மனிசிக்கு எப்படிப்போட்டு விளங்கப்படுத்தியும் ஏறுதில்லை. என்னை வேறு என்ன செய்யச் சொல் லுகிறாய்? வேலை ஆனதும் முதல் சம்பளத்திலேயே மீண்டு போடுறன். இப்ப மாத்திரம் என்னைக் கைவிட் டுடாதேயணை! வீட்டிலே பொலிஸ் எல்லாம் வந்து சோதனை நடத்துது'

'என்ன....! பொலிஸுக்கும் சொல் லிப்போட்டே என்னட்ட வந்தனி! எனக்கு வேண்டாம் ராசா இந்தச் சள் ளை! நாளைக்குப் பொலிஸுக்காரன் கள் வந்து என்னைப் பிடிச்சு நாலு கேள் வி கேட்க... நான் தறதற வென்று முழுச..."

இளைஞன் கொஞ்சம் உலக சம்பிரதாயம் தெரிந்தவனாகக் காணப் பட்டான். 'எணை ஆச்சி! நீ பயந்து சாகிறாய்? இப்பநான் உதைப் பெரிய கடையில கொண்டு போய் வைக்க மாட்டேனே. உன் னட்டை என்றால் அயலுக்கை... ஏதோ... அஞ்சு... பத்து... உலக்கும்' 'அஞ்சு பத்து' மாத்திரம் உடனே பலித்தது!

கிழவி இறாலைக் கழுவியெடுத் துக்கொண்டு உள்ளே போனாள். இவ்வளவு நேரமும் காத்திருந்த காகத்தின் வாயில் மண்ணைப் போடு வதற்கென்று எங்கிருந்தோ ஓடிவந்த கிழவியினுடைய வாடிக்கை நாய், அரிவாளை நக்கி எடுத்து, கிழவிக்கு ஒத்தாசை செய்தது.

முந்தானையால் கையைத் துடைத்தபடி 'எங்கை எடு பார்ப்பம்' என்று கையை நீட்டினாள் கிழவி. நல்லகணம். குறைஞ்சது நானூறு மதிக்கலாம் என்று கிழவி யின் அனுபவம் கைகூறியது.

'இது என்ன இரண்டரைப் பவு ணும் தேறாது போலக் கிடக்குது? எவ் வளவு கேட்கிறாய்? 'ஒரு முன்னூறு...'

இப்ப உங்கை ஆரிட்ட மாறிறது? செல்லாச்சியும் மூத்த மோளின்ரை பிள்ளைப்பெத்துக்குச் சிலவழித்துப் போய் நிற்கிறாள். சின்ன மோனை படுத்தபடுக்கையாய் கிடக்கிறான்...' இன்னும் என்னவோ எல்லாம் கிழவி முணுமுணுத்தாள் காதில் விழ வில்லை.

மடியை இறுக்கிக் கட்டிக் கொண்டு, இடுப்பிலே சொருகியிருந்த தடுக் கை இழுத்துத் தட்டி, குந்திலே போட்டாள் கிழவி. 'உதிலை இருடா மோனை! அஞ்சு நிமிட்டில வந்தி டுறன்... உந்தக் கட்டையில போற வன்ர மாடு வந்திடும்... ஒருக் கால் பார்த்துக்கொள்...' என்ற படி பிலா விலைக் கம்பியையும் தூக்கிக் கொண்டு 'முணுமுணு என்று தன் சொந்தப் பாஷையில் ஏதோ பேசிய படி புறப்பட்டாள் கிழவி.

பெற்ற தாயிட்டக் களவெடுத் துக்கொண்டு வந்திருக்கு மூதேவி! என்னெண்டு தான் உருப்படப் போகு தோ உலகம் கெட்டுப்போச்சு... கன கத்தின்ர மூத்தவன் ஒரு போக்கு... அவளுக்கும் வேணும்.. கொக்கு வில்ல தன்னட்டைதான் கல்லட்டியல் கிடக்கென்ற கெறுக்கு... முத்தாச் சியின்ர செத்தவீட்டுக்கு வந்த இடத் தில என்னோட கட்டிப்பிடிச்சு அழக் கூட இல்லை!'

நாலு வீட்டுக்கும் போய் கிழவி வருவதற்கிடையில் இளைஞனு டைய முக்கால்வாசிப் பிராணனும் போய்விட்டது. தடுக்கில் இருந்த நெட்டியெல்லாவற்றையும் பிய்த்துப் பிய்த்துப் பல்லைக் குற்றியபடியே இருந்தரன். சமய சந்தர்ப்பம் தெரி யாமல், நிரைவிட்டுப்போன கொள்ளி எறும்புகள் வேறு இடைக்கிடை அவன் காலை ருசிபார்த்தன.

புல்லுக்கார மனுசியொன்று, என்ன இளவோ சமுசயப்பட்டு, திரும் பித் திரும்பிப் பார்த்தபடியே போனாள்.

அவள் அந்தப் பக்கமும் வரு கிறவள். கால்சட்டை போட்டபடி குந்தில் இருக்க வெட்கம் பிடுங்கித் தின்றது. 12 மணிபோல கிழவி யார் யாரையோ திட்டிக்கொண்டே அவர் கள் ஏழேழு தலைமுறையும் என் னென்ன வியாதிவந்து சாகவேண்டும் என்று 'லிஸ்டு' தயாரித்தபடியே வந்து கொண்டிருந்தாள். பிலாவிலை நிரம்பி வழிந்தது.

வந்தவள் வெகு சாவகாசமாகக் குந்தியிருந்து ஒவ்வொரு இலை யாகக் கிழித்து ஆட்டுக்குப் போட்ட படியே இருந்தாள்.

இளைஞன் பொறுத்துப் பொறுத் துப் பார்த்தான். கிழவி பேசுவதாய்க் காணோம்! நெருப்புமேலே இருப்பது போல் இருந்தது அவனுக்கு. 'என் னணை ஆச்சி... போன விஷயம்?'

'நான் என்னத்தைச் செய்ய?... எல் லா எல்லா வேஷையளும் பஞ்சம் கொட்டுறாளவை... உனக்குத் தெரி யுமே... முழிக்காறக் கந்தையற்ற பேர்த்தி... இப்ப அவள் தான் புதுப் பணக்காரி. சாதிக்குணத்தை என்னி லேஎல்லே காட்டுறாள். கேளடா மோனே... கண்டறியாத பூனை கமு கிலை ஏறி...?' அவனுக்குப் பொறு மையில்லை. 'அப்பா நான் வரப் போறேன்.... நீ அதை எடு! 'என்னடா அதுக்கிடையில கோவிக்கிறாய்! ஆக கொக்குவில்ல அவள் ஒருத்திதானே பணக்காறி. மற்ற எல்லோரும் செத் துப்போனாளவையே? இந்தா... இவ் வளவுதான் தேறிச்சுது... ஒருத்தியிட்டடையும் இந்த நேரம் இல்லை!'

எவ்வளவணை கிடக்குது? எண் ணிப்பாரேன்! இருபத்தேழு தந்தாள் பாவி. நான் ரெண்டு எடுத்திற்றன் மிச்சம் இருநூற்றம்பது இருக்குது. மாதக் கடைசியிலே மீண்டுபோடு. 'எமகாதகி' என்று முணுமுணுத்த படியே கால்சட்டைப்பைக்குள் காசை வைத்துக்கொண்டு புறப்பட்டான் இளைஞன்.

★ ★ ★

கச்சான் காற்று அடித்து ஓய்ந்து, மறுபடியும் சோளகம் வீசத் தொடங் கிவிட்டது. கொழும்புக்குப் போன வன் திரும்பிவந்த ஒரு அசுகை, அசு மாற்றத்தையும் காணவில்லை. கிழவி எதிர்பார்ததுதான். கிழவிக்கு என்ன பைத்தியமா, நல்ல பெறுமதியான நகையைக்கொண்டுபோய் வேறு யாரிடமும் வைப்பதற்கு? நகையை வாங்கி வைத்துக்கொண்டு 'வாயைக் கட்டி வயிற்றைக்கட்டி' சேர்த்த தன் னுடைய காசைத்தான் கொடுத்திருந் தாள். மறுபடியும் வந்து கேட்டால் 'கண்டது ஆர் கேட்டது ஆர்' என்று அடிச்சு மூடிவிட்டால் போகிறது...

அன்றைக்கெனறு கிழவியினுடை மூத்தமகள் வந்திருந்தாள். 'எண ஆச்சி என்ர மோளின்ரை சாமத்தி யச் சடங்கைகொஞ்சம் 'பப்பிளிக் காய் நாலு பேருக்கும் சொல்லிச் செய்யப் போறேன். சிலவுக்கு ஒரு நானூறு எங்காலும் மாறித்தாவன். சடங்கு முடிந்த கையோட திருப் பித் தந்திடுவன்'

இதென்னடி நீ! "சுடுகுது மடி யைப்பிடி' எண்டால் ஆர் தருவினம். அதுவும் ஆரெண்டாலும் சும்மா தாரண்டவளவையே...?'

'என்னணை ஆச்சி! ஊரில நான் குடுத்த காசெல்லாம் நிக்குது. பொடிச் சியின்ர சடங்கோட ஒரு ஐநூறு அறு நூறாவது சேரும்... உன்ர காசு எனக கென்னத்துக்கு, 5 சத வட்டியோட அப்படியே தந்திடுறன்"

'சரி, நீ வீட்டை போ! நான் உங் கினைக்க பார்த்திட்டு வாறன்' என்று கிழக்குப்பக்கம் கையைக் காட்டி னால் கிழவி.

பாக்கியமும் கிழவியினுடைய மகள்தானே. கிழக்குப்பக்கம் கை யைக் காட்டினால் மேற்குப்பக்கத் தில் தான் எங்கோ மாறப்போகிறாள் என்று அர்த்தம். 'சீனியற்றைசெல் லாச்சியாக இருக்குமோ' என்று ஊகித்தபடியே எழுந்து புறப்பட்டாள் பாக்கியம். வெய்யில் காய்ந்து கொண்டு தானிருந்தது. எனினும், கிழவியினுடைய தீட்சண்ய புத்தி யிலே மழைபெய்யும் போலப்பட்டது.

அப்படியே காயப்போட்ட விறகு களை அவசர அவசரமாக அள்ளி 'அசைவிலே' அடுக்கினாள்.

பிலாவிலைக் கம்பியையும் தூக் கிக்கொண்டு, அடிக்கடி மடியைத் தொட்டுப்பார்த்தபடியே புறப்பட்டாள் கிழவி.சொந்த மகளிடமே வட்டிக் குக் கொடுக்கும் சுவாரஷ்யத்தை இதற்கு முன்பு அவள் அனுபவித் தது கிடையாது. செல்லாச்சியிடம் கொடுத்தால் கண்ணை மூடிக்கொண்டு நானூறு தருவாள்.

கிழவிக்கு என்னவோ ஞாபகம். மடியானைப் பிரித்துப்பார்த்தாள். ஏதோமாதிரியிருந்தது. வெளிச்சத தில் எடுத்து உற்றுப் பார்த்தாள்.

வயிறு பகீரென்றது. கண்ணெல் லாம் சுழட்டிக் கொண்டு வந்தது. நடுவழியில் கிழவி பொத்தென்று குந்திவிட்டாள். நடுங்கும் அந்தக் கையிலே கிடந்த நகை அவளைப் பார்த்து இழித்தது. என்ன இருந் தாலும், பித்தளை பித்தளைதானே!

எங்கோ சேவல் ஒன்று படபட வென்று செட்டையை அடித்துக் கொணடது. மின்னவில்லை! முழங்க வில்லை! 'படீர் படீர்' என்று தடித்த மழைத்துளிகள் அங்கும் இங்கும் பொட்டுப்பொட்டாக விழுந்து தெறித்தன. கிழவியின் வறண்ட கண்ணீர் விழுந்தஇடம் தெரியவே யில்லை! இயல்பான கொக்குவில் புழு தியின் வாசனை கம்மென்று

## டெஸ்ட் கிரிக்கெற் தொடர்

# கண்டி அஸ்கிரிய மைதானத்தில் தூள் கிளப்புகிறது அவுஸ்திரேலியா!

இலங்கை அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே கண்டி அஸ்கிரிய மைதானத்தில நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின் போது அவுஸ்திரேலிய அணி அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெற்றினை இழந்து 221ஓட்டங்களைப் பெற்று மிகவும் பலம் வாய்ந்த நிலையில் உள்ளது.

7 விக்கெற்றினை இழந்து 92 ஓட்டங்கள என்ற நிலையில் நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றினையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

முதல்நாள் ஆட்டத்தில் இக்கட்டான நிலையில் இருந்த இலங்கை அணியின் பின்வரிசை ஆட்டக்காரர்களான சமிந்தவாஸ், முரளிதரன் ஆகியோர் சிறப்பாக விளையாடியமையால் இலங்கை அணி ஸ்திரமான நிலையை அடைந்தது.

இலஙகை அணி சார்பில் சமிந்த ஆட்டமிழக்காமல் 68ஓட்டங்களையும் முத்தையா முரளிதரன் 28 பந்துகளை எதிர்கொண்டு 43ஓட்டங்களையும் பெற்றனர். இதில் 3சிக்ஸர்கள் அடங்கலாக 43ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஆட்டநேர முடிவின் போது 2 விக்கெற்றினை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது. மத்தியூ ஹேடன் 5ஓட்டங்களுடனும் ஜஸ்ரின் லாங்கர் 9ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அடம்ஸ் கில்கிறிஸ்ற் ஆட்டமிழக்காமல் 140ஓட்டங்களையும் டேமியன் மார்டின் ஆட்டமிழக்காமல் 64ஓட்டங்களையும் பெற்றிருக்கின்றார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக சமிந்தவாஸ் நூவான் சொய்ஷா ஆகியோர் தலா ஒரு விக்கெற்றினை வீழ்த்தினர். (ச-121)

## மகாநாம தலைமையில் 6 பேர் அடங்கிய அணி யாழ். வரும்

(வட்டுக்கோட்டை)

ஜனசக்திக் காப்புறுதிக் கம்பனியின் ஏற்பாட்டில் இலங்கை கிரிக்கெற் அணி வீரர் றொசான் மகாநாம தலைமையிலான 6பேர் கொண்ட அணி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி மற்றும் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்கள் இணைந்த அணிக்கும் இலங்கைத் தேசிய கிரிக்கெற அணி வீரர்களுக்குமிடையிலான 6பேர் கொண்ட கட்சித் துடுப்பாட்டம் இனறு வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஜனசக்திக் காப்புறுதிக் கம்பனியின் அனுசரணையுடன் நடைபெறும் இப் போட்டியில் கலந்து கொள்ளவே மகாநாம தலைமையிலான 6பேர் கொண்ட வீரர்கள் யாழ்.வரவுள்ளனர். (ந-79)



காவல் பிட்டியில் நடைபெற்ற இந்தியா-பாகிஸ்தான் இடையேயான 2வது ஒருநாள் போட்டியில் 12ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது. இந்திய நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் 135பந்துகளை எதிர்கொண்டு 141ஓட்டங்களைக் குவித்தார். இப் போட்டியில் 13ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து உலகின் முதல் வீரர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார். இப்போட்டியில் தனது 37வது சதத்தை அடித்த மகிழ்ச்சியில் சச்சின் டெண்டுல்கர்.

# சுனில் கவாஸ்கரின் சாதனையை சச்சின் டெண்டுல்கர் முறியடிப்பார்

இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுலகர் ஒருநாள் போட்டிகளில் 13ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ளார்.

அண்மையில் பாகிஸ்தானில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியிலேயே அவர் இச்சாதனையை எட்டிப்பிடித்தார். இந்தப் போட்டியில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 141ஓட்டங்களைப் பெற்றதுடன், தனது 37சதத்தினை பூர்த்தி செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அதேபோல் டெஸ்ட் போட்டிகளில் விரைவில் முன்நிலைக்கு வரவிருக்கின்றார். இதுவரை டெஸ்ட் ஓட்டங்களாக 9ஆயிரத்து 265ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அதே வேளை, 10ஆயிரம் ஓட்டங்களை விரைவில் எட்டிப்பிடிக்க இருக்கிறார்.

இவருக்கு முன்பாக இந்தியாவின் சுனில் கவாஸ்கர், அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ்வோ, அலன் போர்டர் ஆகியோர் உள்ளனர். அதிக சதங்கள் பெற்ற இந்தியா வின் சுனில் கபவாஸ்கரின் 34சதங்களை எட்டிப்பிடிக்க இருக்கின்றமை மட்டுமல்லாமல் அந்த சாதனையை முறியடிப்பார் என எதிர்பார்க்கப்படு கின்றது. (தி-121)

## இங்கிலாந்துடனான போட்டியில் கொலின்ஸ் விளையாடுகிறார்

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாட அறிவிக்கப்பட்ட மேற்கிந்திய அணியில் இடதுகை வேகப்ப்ந்து வீசாளரான பெற்றோகொலின்ஸ் இடம்பெற்றுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், இங்கிலாந்து அணிக்கும் இடையில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி அபார வெற்றியீட்டியது. இந்தப் போட்டியில் மேற்கிந்திய அணி சார்பாக விளையாடிய இளம் வேகப்பந்து வீச்சாளர் பீற்றர் எட்வேட்ஸ் காயத்துக்குள்ளாகி இருக்கிறார்.

பீற்றர் எட்வேட்ஸ் இன்னும் பூரண குணமடையாத நிலையில் 13 வீரர்களைக்கொண்ட இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான மேற்கிந்தியக் குழாமில் அவரது மூத்த சகோதரரான பெற்றோகொலின்ஸ் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

காயத்திலிருந்து குணமடைந்துள்ள இளம் துடுப்பாட்ட வீரர் டிலைன் ஸ்மித்தும் அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இந்த அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களின் விபரம் வருமாறு,

பிறைன்லாரா (அணித் தலைவர்) கிறிஸ்கெயில, பெவன் ஸ்மித், டிலையின் ஸ்மித், ராம்நரேஸ சர்வான், வக்னறேன் சந்திரபோல், றிக்காடோ பவல், றியைக் கையன்ஸ், ரெட்லி ஜேக்கப், கொறி கொலமோர், அடம்ஸ் சன்போட், டினோ பெஸ்ட், பெற்றோ கொலின்ஸ். (தி-121)

# பாக்.,ஆஸி.,இந்தியா மும்முனைத் தொடர்

இந்திய, பாகிஸ்தான், அவுஸ்திரேலிய அணிகள் பங்குகொள்ளும் மும்முனை சர்வதேச கிரிக்கெற் போட்டித்தொடர் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது.

நெதர்லாநதில் நடைபெறவுள்ள இந்தப் போட்டித்தொடர் இங்கிலாந்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.சீ.சீ. வெற்றிக்கிண்ணப் போட்டிக்கு ஒரு முன்னோடிபபோட்டியாக இருக்கும் என்று பாகிஸ்தான் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை நிறைவேற்று அதிகாரி ரமேஸ்ராஜா தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்தில் சர்வதேச தரத்திலான போட்டி நடாத்துவது குறிதது ஆராய்வதற்காக சர்வதேச கிரிக்கெற் பேரவையின் குழுவொன்று அங்கு சென்று ஆராய்ந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.சீ.சீ.கிண்ணப்போட்டிகளுக்கு முன்னதாக நடைபெறவுள்ள இப்போட்டியை ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ரசிகர்கள் இதனை வரவேற்பார்கள் என்று அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார். (தி-121)

## மெய்வன்மைப் போட்டி

(வவுனியா)

வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுபபோட்டி கல்லூரியின் பீடாதிபதி கே.பேனாட் தலைமையில் எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலலூரியின் முன்னாள் பீடாதிபதி திரு. திருமதி எஸ்.அழகரட்ணம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-52)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநா போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு நல்லூா சிவஞான பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபா் திருமதி க.கணேசமூா்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், சட்டத்தரணி க.கேசவன் பிரதம விருந்தினராகவும்,திருநெல்வேலி இந்து தமிழக் கலவன் பாடசாலை அதிபா க.ஜெயானந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனா். (ச)

* * *

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று அரசினர் தமிழக் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை அதிபர் வே.அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி பிரதிக் கல்விப பணிப்பாளர் ஏ.ராசேந்திரம் கலந்து கொள்ளவுள்ளார். (தி-52)

## 'காவேரி' கிண்ணத்திற்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையினரின் அனுசரணையுடன் அல்வாய் வடக்கு இளங்கோ சன சமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் வீரவேங்கை "காவேரி" ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கு யாழ்.மாவட்ட விளையாட்டுக்கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஏபரல் மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 25ஆம் திகதியாகும். (தி)

## சங்கானை பிரதேசமட்ட மரதன் ஓட்டப்போட்டி முடிவு

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலா் பிரிவின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளில் நேற்று முன்தினம் 7.30மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்ற ஆண்களுக்கிடையிலான மரதன் ஓட்டப்போட்டி நிகழ்வில் ப.ஜயானந்தன் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டார்.

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ் ஆரம்பித்துவைத்த இந்தப் போட்டி நிகழ்வில் 22வீரர்கள் கலந்து கொண்டிருந்தனர். சுமார் 15கிலோ மீற்றர் தூரத்திற்கும் அதிகமான இத்தூரத்திலான மரதனோட்ட நிகழ்வில் முதலாம் இடத்தினைப்பெற்ற வீரர், ஒரு மணித்தியாலம் 5நிமிடம் 39விநாடிகளில் இத்தூரத்தினை நிறைவுசெய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் 2ம் இடத்தினை இ.ரசிம் பெற்றுக் கொண்ட அதேவேளை, 3ம் இடத்தினை இ.பாஸ்கரன் பெற்றுக்கொண்டார். (து-68)

## தென்னாபிரிக்க கேர்ஸ்டன் ஓய்வு பெறத் தீர்மானம்

தென்னாபிரிக்காவின் சிரேஷ்ட வீரரான கரி கேர்ஸ்டன் சர்வதேசக் கிரிக்கெற் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளார். நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் நியூசிலாந்து அணியுடனான போட்டிச் சுற்றுலா நிறைவுபெற்றதும் ஓய்வு பெறத தீர்மானித்துள்ளதாக கரி கேஸடன் தெரிவித்துள்ளார்.

இந்த வார இறுதியில் நியூசிலாந்திற்கெதிராக தனது 100வது டெஸ்டில் விளையாடிய கரி கேர்ஸடன், தனது டெஸ்ட் கிரிக்கெற் வாழவின் 21வது சதத்தினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

36வயதான கரி கேர்ஸ்டன் 1993 /94 காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடினார். இதுவரை7ஆயிரத்து 210 ஓட்டங்களை டெஸ்ட் போட்டிகளில் பெற்றுள்ளார். இவர் டெஸ்ட் விளையாடும் ஏனைய 9நாடுகளுக்கெதிராகவும் சதத்தினை விளாசிய முதல் வீரரென்பதும் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். அத்துடன்185 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ள கேர்ஸ்டன் 6ஆயிரத்து 798 ஓட்டங்களுடன் 40.95 என்ற சராசரியையும் பெற்றுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது. (தி-121)



இந்தியா-பாகிஸ்தான் இடையேயான 2வது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் வீரர் அடித்த பந்தைப் பிடிக்க முயன்ற இந்திய வீரர் ஆசிஷ் நெஹ்ராவின் காயமடைந்த தனது கையை பார்க்கிறார்.

# இன்று ஒரு தகவல்

## புகழ்ச்சி ஒரு மருந்து !

ஒரு பள்ளிக்கூடத்துக் குழந்தைகளிடம் விஞ்ஞான பூர்வமாக ஒரு சோதனை நடத்திப்பார்த்தார்கள். அதாவது அவர்களுக்கு ஒரு பரீட்சை வைத்துப்பார்த்தார்கள். பரீட்சை வைப்பதற்கு முன் அவர்களைப் பார்த்து "நீங்கள் நல்ல புத்திசாலிகள், நல்ல கெட்டிக்காரப் பிள்ளைகள் உங்களிடம் நல்ல திறமை உள்ளது. இந்தப் பரீட்சை உங்களுக்கு மிக சுலபமாக இருக்கும்" என்று கூறிப் பரீட்சை எழுத அனுப்பினார்கள்.

இந்த புகழுரையைக் கேட்டுவிட்டு அவர்கள் பரீட்சை எழுதினார்கள். சராசரிக்கு மேலாக இருந்தது அவர்கள் எழுதியது. எல்லோருக்கும் கூடிய புள்ளிகள் அதே பள்ளிக்குழந்தைகளிடம் இன்னுமோர் பரீட்சை வைத்தனர். அதுவும் முதலில் வைத்ததுபோலவே மிகவும் சுலபமான பரீட்சை தான். இருந்தாலும் பரீட்சை எழுதப்போகும் பிள்ளைகளைப்பார்த்து... "இந்தப்பரீட்சை மிகவும் கஷ்டமாக இருக்கும் இதைத் திறமையாக எழுதும் அளவிற்கு உங்களுக்கு புத்திசாலித்தனம் போதாது" என்று ஆரம்பித்து அவர்களின் குறைகளையே சுட்டிக்காட்டி பேசிவிட்டு பரீட்சை எழுத அனுப்பிவைத்தார்களாம். இவர்கள் பரீட்சையை சரியாகவே எழுதவில்லையாம். புள்ளிகளும் குறைவாகவே இருந்ததாம்.

இந்த வித்தியாசத்திற்கு காரணம் என்ன? புகழ்ச்சி தான்.அவர்களை பேசி அனுப்பினார்கள். அதிக புள்ளிகள்கிடைத்தது. இவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டி இகழ்ச்சியாகப் பேசி அனுப்பினார்கள். குறைந்த புள்ளி கிடைத்தது.புகழ்ச்சி என்பது ஒரு அற்புதமான மருந்து என்கின்றனர் நிபுணர்கள்.

இந்தப் புகழ்ச்சி மருந்தை நாம் சுலபமாக தயாரித்து தாராளமாக மற்றவர்களுக்கு கொடுக்கலாம். இதற்குக் காசு பணம் செலவாகாது. ஆனால் பலன் அதிகம். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளிடம் இந்த மருந்தைக்கொடுங்கள். அவர்கள் நன்கு படித்து அதிக புள்ளிகள் வாங்குவார்கள்.

வியாபாரத்தில் உங்கள் கூட்டாளிக்கு இந்த மருந்தைக் கொடுங்கள் நன்கு ஒத்துழைப்பார்கள். பணம் சம்பாதிக்க உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் உறவினர்களுக்கும் இந்த மருந்தைக்கொடுங்கள் சந்தோஷப்படுவார்கள். பாசத்துடன் இருப்பார்கள். இந்த மருந்து உங்களிடம் இருந்தால் எங்கு நீங்கள் சென்றாலும் மகிழ்ச்சியைப் பரப்ப முடியும்.

இந்த மருந்தை நீங்கள் இன்னொருவரிடம் கொடுக்கும் போது அது உங்களுக்கும் போதுமான அளவு கிடைக்கும். உங்களை சந்தோஷப்படுத்தி புகழும் பணமும்சேர்க்க உதவும். புகழ்ச்சி என்ற மருந்துக்கு அவ்வளவு சக்தி இருக்கின்றது.

அல்பிரட் ஆட்லர் என்று ஒரு மனவியல் நிபுணர். என்ன செய்வாராம் கவலை, பய்ம்,கலக்கம் போன்றவற்றுக்கு இரையான தனது நோயாளிகளிடம் போவாராம். அவர்களைப் பார்த்துச் சொல்வாராம். "நீங்கள் யாராவது திருப்திப்படுத்தவேண்டும் அல்லது யாருக்காவது மனமகிழ்வையுண்டாக்க வேண்டும் என்று தொடர்ந்து நினைத்துக கொண்டிருங்கள். அப்படி இருந்தால் 14 நாளில் உங்கள் குறைபாடுகள் நீங்கும்" என்று சொல்வாராம் அதேமாதிரியும் ஆகிவிடுமாம்.

அடுத்தவர்களை திருப்திப்படுத்துவதற்கு என்ன வழி பொதுவாக அடுத்தவர்கள் நம்மில் எதை எதிர்பார்க்கிறார்கள்? நமது புகழையும் பாராட்டையும் தான் எதிர்பார்க்கிறார்கள். வில்லியம் ஜேம்ஸ் என்ற ஒரு அமெரிக்க மனோதத்துவ நிபுணர் கூறுகிறார் "மனித இயல்பின் ஆழமான தத்துவம் என்னவென்றால் பாராட்டைப் பெறுவதற்காக ஏங்குவது தான்" என்றார். இந்த ரகசியத்தை நாம் புரிந்து கொண்டால் வாழ்வில் வெற்றியடைவது சுலபம்.

இந்த விபரங்களை எனக்குத் தெரிந்த ஒருவரிடம் கூறிக்கொண்டு இருந்தேன். உடனே அவர் "சார் .... நீங்கள் சொன்னபடி நடக்கத்தொடங்குகிறேன்" என்று கூறிவிட்டு ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்து எழுத ஆரம்பித்து விட்டார். "என்ன எழுதுகிறீகள்?" என்று கேட்டேன். "பாராட்டுக கடிதம் எழுதுகிறேன். போனவாரம் ஒரு பத்திரிகையில் வந்த சிறுகதையைப்பாராட்டி எழுதுகிறேன். கதாசிரியரைப் புகழ்ந்து எழுதப்போகிறேன்" என்றார். "கதாசிரியர் யார்?" என்று கேட்டேன். அவர் மெதுவாக அருகில் வந்து "நான் தான் சார் அது" என்றார்.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# ஐ.தே.மு. வின் ஆட்சியின் போது பொருளாதாரம் வளர்ச்சி கண்டது

## பிரதமர் ரணில் பெருமிதம்

(கொழும்பு)

இவ் வருட இறுதிக்குள் அரச தொழில் வாய்ப்புகளுக்கு மேலதிகமாக தனியார்துறை ஊடாக சுமார் ஒரு லட்சம் பேருக்குத் தொழில் வாய்ப்பை வழங்க ஐக்கிய தேசிய முன்னணி அரசு தீர்மானித்திருந்த போதிலும் அரசாங்கம் கலைக்கப்பட்டதன் காரணமாக அந்தத்திட்டத்தை அமுல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய பிரதமர் ரணில், ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற வேளையில் பொருளாதாரம் சீருகுலைந்திருந்தது.

இதன் காரணமாக கூடியளவு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. ஆயினும் தற்போது நாட்டின் பொருளாதாரமானது 5.6 வீதத்தினால் அதிகரித்துள்ளது.



இதன் மூலம் புதிய தொழில் வாய்ப்புக்களை இவ்வருடம் வழங்கக்கூடிய நிலை உருவானது என்றும் தெரிவித்ததுடன் ,அரசாங்கம் திடீரென்று கலைக்கப்பட்டதன் ' காரணமாக இதனை நடை முறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

(து-61,8)

# பண்பாட்டுக்கு பாதிப்பு ஏற்பட்டால் பார்த்துக் கொண்டிரோம்-எழிலன்

(வவுனியா)

எமது பண்பாட்டையும், கலாசாரத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது. எமது பண்பாட்டுக்கு கலாசாரத்திற்கு ஊறுவிளைவிக்கும் நடவடிக்கைகள் ஏற்பட்டால் அதற்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியேற்படுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

கடந்த இருதினங்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு அழைத்துச செல்வதாகக்கூறி தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம்களிலிருந்து அழைத்து வரப்பட்டு கொழும்பில் தடுத்துவைக்கப்பட்ட 50 இற்கும் மேற்பட்ட பெண்கள் வவுனியா அரசியல்த் துறையினரிடம் தஞ்சம் கோரியமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இந்தக் கருத்தினைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் உண்மையிலே இது துரதிஷ்டவசமான நிகழ்வு. எமது பெணகள் மிகப் பாதிக்கப்பட்ட நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது. இவர் கள் அனைவரும் இந்தியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்ந்தவர்கள். பல வழிகளிலும் ஏமாற்றப்பட்டுத்தான் இங்கு அழைத்து வரப்படடுள் ளார்கள். பல கொடுமைகளைச் சந்தித்துள்ளார் கள். எமக்கு ஒரு விடயம் புதிராக உள்ளது. இவர்களை ஒருமுறை கைதுசெய்து பொலிஸார் விசாரித்தபோது, 18 வயதுக்குட்பட்ட சிறுமியர்கள் தாம் பணிப் பெண் களாக மத்திய கிழக்கிற்கு அனுப்பி வைக்கப்படு வதற்காக அழைத்து வரப்பட்டவர்கள் என்று கூறியபோதும், பொலிஸார் அவர்களை அந்த முகவர்களிடமே கையளித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக யார்? யார்? சம்பந்தப்பட் டுள்ளனர் என்பது தொடர்பாக நாம் ஆராய்ந்து வருகின்றோம். இனிவருங்காலங்களில் இத்தகைய சம்பவங்கள் தொடரக்கூடாது என்பதே எமது விருப்பம். இதனுடாக இந்தியாவிலுள்ள நமது பெண்களுக்கு நாம் கூறவிரும்புவது யாதெனில் இயன்றளவு ஆராய்ந்து இத்தகைய துர்ப்பாக்கிய நிலைகளில் இருநது தப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவித்தார்.

(தி)

# இராசிபலன்

**19. 03. 2004**

**(பங்குனி 06, வெள்ளிக்கிழமை)**

**சதுர்த்தசி பின்னிரவு 5.10 மணி வரை**
**சதயம் முன்னிரவு 10.15 மணிவரை**
**இராகுகாலம் 10.48-12.18 மணிவரை**
**சுபநேரம் 6.18-7.48 மணிவரை**

**மேடம்**
தெய்வதரிசனம், தொழில் முன்னேற்றம், பெருமையான சம்பவம், நண்பர்கள் சந்திப்பு.

**இடபம்**
சுப நிகழ்ச்சி, நல்ல செய்தி, தெய்வ சிந்தை, பிறர் உதவி.

**மிதுனம்**
ஆன்றோர் மதிப்பு, வயிற்றுக்கோளாறு, வீண் பயம், புதிய திட்டமிடல்.

**கடகம்**
வீண் தொல்லை, போசன நன்மை, காரிய தடங்கல், பிரயாண பயம்.

**சிங்கம**
திடீர்பயணம், அபூர்வ சந்திப்பு, விருந்துபசாரம், தெய்வ சிந்தை.

**கன்னி**
சத்துரு ஜெயம், தனவரவு, சுகவாழ்வு, தொழிலில் ஆர்வம்.

**துலாம்**
வியாபார நன்மை, காரிய இடையூறு, கௌரவக் குறைவு, மனச்சஞ்சலம்.

**விருச்சிகம்**
கல்வியில் ஆர்வம், அற்பர் நேசம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், தாய்வழி உறவு.

**தனுசு**
அந்நியர் சந்திப்பு, இனிய அனுபவம், வாக்கு மேன்மை, காரிய சித்தி.

**மகரம்**
மாதர் நட்பு, மதிப்புக் குறைவு, ரோகநிலை, காரிய தாமதம்.

**கும்பம**
நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம்.

**மீனம்**
காரிய தாமதம், பொருள் விரயம், தொழில் கஷ்டம், பிரயாணம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**- வளவன்.**

# தேர்தல் கடமைகளில் ஈடுபடும் பொலிஸாருக்கு பணிப்புரை

(கொழும்பு)

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் சகல பொலிஸாரும் தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய பணிப்புரி வேண்டும் என தேசியப் பொலிஸ் ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சகல பொலிஸாருக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் பி. விஜயரட்ண தெரிவித்துள்ளார். இநத ஆலோசனைகளுக்கு அமைய பொலிஸார் தேர்தலுக்கு வாக்களிப்பது தவிர்ந்த வேறெந்த அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது பூரண மாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழு வின் அறிவுறுத்தல்களை மீறும் பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.இதன்படி தேர்தல் கடமைகளில் ஈடுபடும் பொலிஸார் தேர்தல் ஆணையாளரின் உத்தரவு கமைய பணிபுரிய வேண்டு மெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(து-61,8)

# ஐ.ம.சு. முன்னணி வேட்பாளர்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் புத்தளம் மாவட்ட வேட்பாளர்கள் இருவரை ஆனமடுவப் பொலிஸார் கடந்த செவ்வாயன்று கைது செய்துள்ளனர்.

கடந்த14ம் திகதி ஆனமடுவப் பிரதேசத்தில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரின் வீடு தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவ் வேட்பாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வேட்பாளரான டி.எம். தஸநாயக்க, சுயேச்சைக்குழுவின் வேட்பாளரான ருவான் சம்பத் அபயரட்ண ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.இவர்களுடன் மேலும் நால்வர் கைது செயயப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட நபர்களை புத்தளம் மஜிஸ்திரேட் முன்னிலையில் கடந்த செவ்வாய் ஆஜர் செய்த போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான டி.எம். தஸநாயக்க மற்றும் ருவான் சம்பத் அபயரட்ண ஆகியோர் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன், ஏனையோரை எதிர்வரும் 25ஆம்திகதி வரை விளக்க மறியலில் வைக்கு மாறும் நீதவான் உத்தர விட்டார்.

(சு-61.10.8)

# காசி ஆனந்தனின் கவிவரிகளோடு ஒத்துப்போகும் இன்றைய நிலைப்பாடு

ஒரு போராளியாக, அதிலும் மட்டு-அம்பாறைத் தளபதியாக விளங்கிய கருணா, இன்று சுதந்திரப் போராட்டத்திற்கு எதிரான துரோகியாகச் செயல்படுவதை அறிந்துள்ள



எந்த ஒரு தமிழீழ நெஞ்சமும் வேதனையாலும் கோபத்தாலும் கொந்தளிக்கத்தான் செய்யும். தனது துரோகச் செயல்களை நியாயப்படுத்துவதற்காக, கருணா கூறுகின்ற காரணங்கள், மேலும் அவரது தலைவரின் கரங்களை வலுப்படுத்தி, தாயகத்தின் விடிவிற்காய், ஊக்கத்தோடும், உற்சாகத் தோடும், செயல்படவேண்டிய தருணமாக இதைக் கொள்ளவேண்டும்.

## ஊடகங்களின் விஷமத்தனம்

இந்த வேளையில், இத் தற்காலிக நெருக்கடி குறித்து, ஸ்ரீலங்காவின் அரச ஊடகங்களும், சில வெளிநாட்டு ஊடங்களும், ஊதிப் பெருப்பித்து, பூதாகரமாகத் தோற்றம் காட்டச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதை அனைவரும் அறிவீர்கள். கருணா முன்னர் எழுப்பிய, தற்போது எழுப்பி வருகின்ற 'குற்றச்சாட்டுக்களுக்கு, இந்த ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து வருவதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. இதன் காரணமாக, சில விடயங்களை இங்கே சுட்டிக்காட்டுவது இந்த வேளையில் பொருத்தமானதாக இருக்கும் என்று நாம் நம்புகின்றோம்.

நாளொரு அறிக்கையும், பொழுதொரு காரணமுமாக, கருணா ஊடகங்களுக்கு செவ்வி அளித்துக் கொண்டிருக்கையில், அதனூடே மிக முரண்பாடான விடயங்கள் வெளிதான், 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் மாவீராகளாகித் தம்மையே தியாகம் செய்திருக்கிறார்கள்.

ஆனால், கருணாவின் இன்றைய செயற்பாடுகள், மாவீராகளுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும், போராளிகளுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும், ஒட்டுமொத்த தமிழ மக்களுக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத் திற்கும், அதன் தலைமைக்கும் எதிராகச் செய்யப்பட்ட மாபெரும துரோகமாகும்.

## உணர்ச்சிக் கவிஞனின் எதிர்வு கூறல்

இவ்வாறான துரோகச் செயலைத தான், உணர்ச்சிக் கவிஞன் காசி ஆனந்தன் அவர்கள், தன்னுடைய 'தமிழன் கனவு' என்ற குறுங்காப் பயத்தில் அன்றே பாடிவைத்தாரோ?

**''மட்டக்களப்பும்யாழ் நகர் மண் ணும்**
**மரபில் வேறுபட்டவை என்றொரு**
**குட்டித்தலைவன் குழம்புவான்**
**அங்கே...**
**குன்றம் சூழ்ந்த மலைநாட்டானை**
**திட்டுவானொரு சிறுமகன்... மன்னார்**
**தருமலை எனச் செந்தமிழ் கூட்டம்**

## பென்குரியனின் உறுதியான செயற்பாடு

அவ்வேளையில் பென்குரியன்



என்பவர் ககானா என்று அழைக்கப்பட்ட இஸ்ரேல் விடுதலை இயக்கத்திற்குத் தலைவராக இருந்தார். இஸ்ரேல் மீது அரபு நாடுகள் போர் தொடுத்தால் அதனை முறியடிப் துரோகமேயாகும்.

வெளிநாட்டு ஊடகங்களுக்குச் செவ்வி அளித்துள்ள கருணா, தன் வசம் உள்ள போா கருவிகளை காட்சிக்கு வைத்துவிட்டு, 'இதனை வன்னி பாரக்கட்டும் என்று கூறியிருப்பதாவது, வலிந்து சண்டைக்கு இழுக்கும் அவரது எண்ணத்தை வெளிப்படையாக்கி உள்ளது.

ஆனால் தமிழீழத் தேசியத் தலைமையோ, மிகுந்த பொறுப்புணர்வுடனும், மதிநுட்பத்துடனும் பேசியும், செயல்பட்டும் வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. தனது தலைமைக்கும், தனது இனத்திற்கும் பச்சைத் துரோகத்தை இழைத்துக் கொண்டு, கருணா பிதற்றித் திரிகையில், தமிழீழத் தேசியத் தலைமையோ பொறுப்புணர்வுடன் பதில் தந்துள்ளது. 'இந்த நெருக்கடியை, இரத்தக்களரியில்லாமல் தீர்த்து வைப்போம்'' என்று தமிழீழத் தேசியத் தலைமை கூறியுள்ளது. தமிழீழத் தலைமையின் இந்தக் கூற்றானது, இந்த நெருக்கடியை அது எவ்வாறு நிதானத்துடன் கையாள்கின்றது என்பதைத் தெளிவாகக் காட்டி நிற்பதால், புலம்பெயர்ந்த தமிழினம் இது

துரோகத்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டத்தான் உதவுகின்றன. ஒட்டு மொத்தத் தமிழீழ விடிவிற்காகப் போராடி, வித்தாகி வீழ்ந்திட்ட மாவீர்களின் தியாகத்தையே கொச்சைப்படுத்தும் வகையில், அன்றைய போராளியும், இன்றைய தமிழினத் துரோகியுமான கருணாவின் சொல்லும், செயலும் அமைந்து வருகின்றன.

## தமிழர்கள் வரலாற்றில் துரோகத்தனம்

துரோகத்தனம் என்பது தமிழர்களின் வரலாற்றில் புதிதாக முளைத்த ஒன்று அல்ல! துரோகத்தனம் என்பது தமிழீழ விடுதலைப போராட்டத்தில் ஏற்படாததும் அல்ல! அதனால்தான் வரலாற்றில் தவிர்க்க முடியாமல் உருவாகின்ற இந்த ஆபத்தான சக்தி குறித்து, தமிழீழத் தேசியத் தலைவர் முன்னரே குறிப்பிட்டுள்ளார். எமது எதிரியையும், அவனது நோக்கத்தையும் இனங்கண்டு கொள்வது சுலபம், ஆனால் துரோகிகள் முகமூடி அணிந்து நடமாடுகிறார்கள். எதிரியின் கைப் பொம்மையாகச் செயல்படுகிறார்கள். தமது சுய நலத்திற்காக, சொந்த இனத்தையே காட்டிக் கொடுக்கத் தயங்காத, இந்த ஆபத்தான பிற்போக்குச் சக்திகள் மீது, எமது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்று தேசியத் தலைவர் துரோகத்தனத்தின் ஒளிவு மறைவான செயல்பாடு குறித்தும், ஆபத்துக்கள் குறித்தும் குறிப்பிட்டிருந்தார்.

## தேசியத்தலைமையின் குறிக்கோளும் செயற்பாடும்

உலக விடுதலைப் போராட்டங்களில் இவ்வாறான துரோகங்கள், ஆதிக்க சக்திகளின் தூண்டுதல்கள், இடம்பெற்றதை உலக வரலாறு கூறும். அதே போல், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திலும், இப்படிப்பட்ட துரோகத் தனங்கள் கடந்த காலத்தில் ஏற்பட்டதை, தமிழீழ சுதந்திரப் போராட்ட வரலாறும் கூறும். இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது தத்துவாசிரியன்; வரலாறு எனது வழிகாட்டி என்று கூறிய தேசியத் தலைவா், இவற்றையெல்லாம் தாண்டித்தான், தமிழீழத் தேசியத்தின் மலர்விற்காக அல்லும் பகலும ஓயாமல் பாடுபட்டு வருகின்றாா. ஆகையால் இந்தத் தற்காலிக நெருக்கடி குறித்து நாம் எவ்வித தயக்கமோ, தளர்வோ அடையாமல். தமிழீழத் தேசியத் வந்து கொண்டிருக்கின்றன.

## கருணாவின் முரண்பட்ட கருத்துக்கள்

சில தினங்களுக்கு முன்பு, இந்தியப் பத்திரிகையான 'இந்து' விற்கு கருணா விசேட பேட்டி ஒன்றை அளித்திருந்தார். அதில் 'தலைவர பிரபாகரன் தமிழீழக் கோரிக்கையைக கைவிட்டு விட்டார்' என்றும், சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது சமஷ்டி ஆட்சிமுறை பற்றித் தான் பேசினோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இதே கருணா தான், சுமார் பத்து நாட்களுக்கு முன்பு, 'தலைவர் பிரபாகரன் மீண்டும் யுத்தம ஒன்றை ஆரம்பிக்கப் போகிறார்' அதற்காகத்தான் ஆயிரம போராளிகளை வன்னிக்கு அனுப்பும படி என்னிடம கேட்டிருந்தார்' என்று கதை அளநதார்.

தலைவர் பிரபாகரன் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கப்போகிறார் என்று ஒருநாள் குற்றஞ்சாட்டுவதும், மறு நாள் தமிழீழக் கோரிக்கை கைவிடப்பட்டு விட்டது என்று அறிக்கை விடுவதுமாக கருணா முரண்பட்ட கருத்துக்களை சொல்லி வருகின்றார். தலைவர் பிரபாகரன் எனக்கு கடவுள் போன்றவர் என்று ஒரு நாள் கூறும் கருணா, மறுநாள் தலைமையை குற்றம் சாட்டுகிறார். தேசியத்தலைவரின் நேரடி ஆணையின் கீழ், செயற்படுவேன் என்று முதல் நாள் கூறிவிட்டு, அடுத்த நாள் மட்டு-அம்பாறைப் பிரதேச வாதத்தைக் கருணா முன்வைக்கிறார்.

## பிரதேச வாதக் கொள்கையும் துரோகமும்

இப்போது கருணா முன்வைக்கின்ற பிரதேசவாதம் ஒட்டு மொத்தத் தமிழினத்திற்கும் வேதனையைத் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழீழத் தேசியத் தலைவரின் வழி நடத்தலில், ஒட்டு மொத்த தமிழினத்தின் விடுதலைக்காகவும், தமிழீழத் தேசத்தின் சுதந்திரத்திற்காகவும், விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இந்த விடுதலைப் போராட்டத்தின் ஊடேதான், தமிழினத்தை பீடித்திருந்த சாபக்கேடுகளான சாதிப் பிரிவினை, வர்க்கபேதம், பிரதேச பேதம், ஆணாதிக்கம் போன்ற பிற்போக்கு வாதங்கள் களையப்பட்டன. முழுமையான தமிழீழத்தின் விடிவுக்காகத்தான் சகல போராளிகளும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்கள். முழுமையான் தமிழீழத்தின் சுதந்திரத்திற்காகத்

**எட்டுப் பத்தாய் பிரிந்து மாற்றான்**
**இந்தக் களத்தில் எரிந்தது நெஞ்சே!**
**விழிகள் சிவந்து விரையும் வரிப்புலி**
**வேட்கை கொண்ட இரையை மறந்து**
**குழியில் குப்பை கிழறும் வழக்கமும்**
**வையகத்தில் உண்டோ தோழரே?**
**மொழியும் நாடும் முதலெனக்**
**கொண்டு**
**முழங்கு களத்தில் இறங்கிய**
**தானை**
**பழிகளாயிரம் தம்முன் வளர்ப்**



**பதோ?**
**பாவிகாள் என்று பலப்பல சொல்லு**
**வேன்**
**ஒனறடா இங்கேயுள்ள தமிழ் நிலம்!**
**ஊர்கள் பிரிந்தால் உண்டோ**
**தமிழ்க் குலம்?**
**குன்றுகள் யாவும் குலைந்து படு**
**மெனில்**
**கோல மாமலை வாழவும் கூடுமோ?**
**நன்ற கண்களும் மூக்குல் கன்னமும்**
**நிங்க முகத்தின் நிலை என்னாகும்?**
**என்றும் ஒற்றுமை எண்ணம்**
**வளர்ப்பீர்!**

இவ்வாறு அன்று கவிஞர் காசி ஆனந்தன் பாடியது, கருணாவின் துரோகத்தை இன்று சாடிக் கொதிக கிறது அல்லவா?

## இஸ்ரேலின் வரலாற்றுத் தழுவல்

ஓர் இனமக்கள் விடுதலையை நாடி நிற்கும்போது, அதைக்குலைக கும் வகையில், அதன் தலைமைக்கு எதிராக உள்சக்திகள் ஒன்றிணைந்து எழுவது என்பது ஒனறும் புதிதான விடயமில்லை. இதற்கு உலக வரலாற்றிலிருந்து எத்தனையோ உதாரணங்களை காட்டலாம் இந்த வேளையில் மிகப்பொருத தமானதொரு உதாரணத்தை இஸ்ரேல் நாட்டிலிருந்தே பெற்றுக் கொள்ளலாம்.

1948ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதியன்று, இஸ்ரேல் ஒரு தனிச் சுதந்திர நாடகப்பிறப் பெடுத்தது. இஸ்ரேல் சுதந்திர மடைந்த சில தினங்களுக்குள் ளேயே அதனை யுத்தக் கருமேகங்கள் சூழ்ந்து கொள்ளும் அபாய நிலை உருவாகியது. இஸ்ரேலைச் சூழ உள்ள அரபு நாடுகள், இஸ்ரேல் மீது எந்நேரமும் போர் தொடுக்கலாம் என்ற நெருக்கடி நிலை தோன்றியது.

பது எப்படி என்ற திட்டங்களில பென்குரயன் ஈடுபட்டிருந்தபோது, செய்தியொன்று, இஸ்ரேல் நாட்டு மக்களுக்கு எட்டியது. அதாவது மெனசிம பெகின் என்ற இன்னொரு இஸ்ரேல் தலைவர், செக்கோசெலவியா நாட்டிலிருந்து, பெருந்தொகையான ஆயுதங்களுடன் வந்து கொண்டிருககின்றார் என்ற செய்தி இஸ்ரேல் மக்களுக்கு உற்சாகமூட்டியது. ஆனால் ஆயுதங்களுடன் வந்து கொண்டிருந்த பெகின், தன்னுடைய ஆயுதங்களை ககானா இயக்கத்திற் குத்தரமுடியாது என்றும், தாம் அரபு நாடுகளுடன் தனித்தே போரிடப் போவதாகவும் அறிவித்தார். அந்த வேளையில் ககானா இயக்கத் தலைவராக இருந்த பென் குரியன் திடமான முடிவொன்றை எடுத்தார். அதாவது பெகின் கொண்டுவரும் ஆயுதக கப்பலைத் தகர்க்கும்படி பெங்குரியன் கட்டளை இட்டார். இது இஸ்ரேல் நாட்டு மக்களை முதலில் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சுற்றிவர அரபு நாடுகள் தம்மீது படையெடுக்கத் தயார் நிலையில் இருக்கும் போது, பெகின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் எழுந்தது.

'ஆனால், விடுதலைப் போராட்டம் என்பது ஒருங்கிணைந்த ஒன்றாக இருக்க வேண்டும், அது தனி மனித செயற்பாடாக இருக்காமல், ஒரு தலைமைத்துவத்தின் கீழ், முழுத் தேசிய நாளைக் கருத்தில் கொண்டதாக இருக்க வேண்டும்' என்பதில் பென்குரியன் உறுதியாக இருந்தார். வெளிச்சக்தியான எதிரிகள் போாபுரியும்போது, உள்ளே பிரிவுகள் தோன்றுவது, ஈற்றில் எதிரிக்கே இலாபத்தை உண்டுபண்ணும் என்பதனையும் பென்குரியன் அறிந்தே வைத்திருந்தார். அதனடிப்படையில் அவா எடுத்த முடிவுகளும், செயற்பாடுகளும் இஸ்ரேல் நாட்டை காப்பாற்றின என்று சரித்திரம் சான்று பகர்கின்றது.

## கருணை அல்ல!...இச்சையே!

அந்த வகையில் கருணா என்ற தனிமனிதன் தன்னுடைய சுயநல அபிலாசைகள் காரணமாக ஏற்படுத்தியுள்ள இந்தச் சிறு நெருககடியை, தமிழீழத் தலைமை வெகுவிரைவில் தீர்த்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. சில தீயசக்திகளின நாசகாரத் திட்டங்களுக்குத் தன்னையும், தன்னுடைய இலட்சியத்தையும் விலை கொடுத்து விட்டு, இன்று பிரதேசவாதத்தை கருணா பேசுவதற்குக் காரணம் கருண்ணை அல்ல! அவரது அற்ப இச்சைக் காகவும், சுயநலத்திற்காகவும் அவர் தமிழினத்திற்குச் செய்கின்ற குறித்து வீணே சஞ்சலம் கொள்ளத தேவையில்லை என்று நாமும் கேட்டுக் கொள்கின்றோம்.

மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் தகவல்களின்படி, கருணாவின் பித்தலாட்டம் இப்போது அம்பலமாகி வருவதனால், அவரால் தோற்றுவிக்கப்பட்ட இந்த நெருக்கடி விரைவில், தன்பாட்டிலேயே பிசு பிசுத்துப் போய்விடும் என்று அறியப் படுகின்றது. தீய சக்திகளின் தூணடுதலின் பேரில் செயல்படத் தொடங்கி, மெல்ல மெல்லச் சிறுகத் தொடங்கியிருக்கும் கருணா, தனது இறுதித் துரும்புச் சீட்டாக, ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை பாவிக்க முயலவும் கூடும்.

**அவுஸ்திரேலியாவிலிருந்து**
**சபேசன்**

ஆனால் அதற்குமுதல் ஏப்ரல் முடடாள் தினம் காத்து நிற்பதை அவர் அறிவாரோ என்னவோ?

இவ்வேளையில் தமிழ் தேசியத்தின் நலனுக்காக அயராது உழைத்து வருகின்ற உலகத் தமிழ உடன் பிறப்புக்களுக்கு நாமும் உரிமையுடன் கேட்டுக்கொள்ளும் வடயம் ஒன்றுண்டு. ஸ்ரீலங்கா அரச ஊடகங்களும், தமிழின விரோத ஊடகங்களும், தற்போதைய நெருக்கடியைப் பெரிதுபடுத்தி, புலம் பெயர்ந்த தமிழீழத்தவரைக் குழப்பத்தில் ஆழ்துவதற்காக பொய்ப்பிரச் சாரங்களில் ஈடுபட்டுவருவதை நாம எல்லோரும் அறிவோம். ஒரு சிலர் பரபரப்புக்காக தவறான தகவலகளை தருவதில் முன்னிற்பதையும் நாம் காண்கின்றோம்.

## புலம் பெயர் தமிழரின் கடமை

இந்த நெருக்கடியான நிலை விரைவில் தீாவதற்கு நாமும் எம்மாலான பணியைச் செய்யலாம். தமிழீழத் தேசியத்தின் நிலைப்பாட்டினை வெளிபடுத்ததக்க வகையில், எமது ஊடகங்களின் செயற்பாடுகளை ஊக்கப்படுத்துவோம். ஏனைய தமிழ் ஊடகங்கள் பிழையான செய்திகளை தந்து, தேச விரோத சக்திகளின் விருப்பத்திற்கு ஏப்ப செயறபடுமானால், அவற்றை முறியடிக்கத்தக்க வகையில், ஒருங்கிணைந்து பரப்புரைப் பணிகளை மேற்கொள்ளுவோம். உலகத் தமிழினம் ஒன்றிணைந்து எமது தேசியத் தலைமையின் கரத்தை மேலும் பலப்படுத்திட நாம்-எமது கடமைகளைச் சரிவரச் செய்வது மிகவும் இன்றியமையாககாகும்.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர் நின்று
போற்றினும் பொத்துப்படும். - குறள்

வலம்புரி

## மனிதாபிமானமற்ற வேலைநிறுத்தம்

அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருத்துவர்களின் வேலை நிறுத்தப்போராட்டத்தினால் வைத்திய சேவை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்து போயுள்ளது. இதனால் பெறுமதி மிக்க மனிதஉயிர்கள் அநியாயமாக அழிக்கப்படுகின்றன.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஒருவாரமாக அரச மருத்துவர்கள் மேற்கொண்டிருக்கும் வேலை நிறுத்தமானது மனித நேயமுடைய எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாததாகும்.

வைத்திய சேவை என்பது மகத்தான -ஒரு புனிதமான சேவை. இறைவனுக்கு அடுத்தபடியாக வைத்தியர்களே தெய்வமாக கருதப்படுகின்றனர். நோயாளர்கள் மீது அன்பு காட்டி, அவர்களுக்கு சிகிச்சையளிக்கும் டாக்டர்களை, நோய் மாறி வீடு திரும்புவோர் இருகரம் கூப்பி கும்பிடுகின்ற உன்னத மருத்துவ தொழில் எவ்வளவு புனிதமானது என்பதை உணர்த்தி நிற்கின்றதல்லவா? ஆனால் அதனை இலங்கையிலுள்ள அரச வைத்தியர்கள் புரிந்துகொள்ளாமல் இருப்பது அவர்களின் மனித நேயமற்ற - வக்கிர குணத்தையே காட்டி நிற்கிறது.

மக்களன் வரிப்பணத்தில் இலவசமாக மருத்துவக் கல்வியை மேற்கொண்ட டாக்டர்களே இலங்கையில் கடமையாற்றுகின்றனர். இதில் ஒருசிலர் விலக்காக இருக்கலாமேயன்றி ஏனைய யாவருக்கும் மேற்கூறப்பட்ட விடயம் பொருத்துடையது.

இவ்வாறு மக்களின் வரிப்பணத்தில் மருத்துவக் கல்வியைப் பெற்ற டாக்டர்கள் இன்று சம்பள முரண்பாட்டைக் காரணம் காட்டி வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர் எனில், இவர்களின் சுயநலம் எவ்வளவு தூரம் மேலோங்கியுள்ளது என்பதை உணர முடியும்.

இலங்கை மக்களைப் பொறுத்தவரை அவர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் குறைந்த நிலையிலேயே உள்ளது. நாற்பது வீதமான மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களாக உள்ளனர். அதாவது, அரச நிவாரணத்தில் தமது ஜீவனோபாயத்தை நிறைவுசெய்யும் நிலையில் 40 வீதமானவர்கள் இருக்கின்றார்கள் எனில், இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரம், தலாவருமானம் என்பனவற்றின் தர நிலை பற்றிப் புரிந்துகொள்ளலாம்.

அவ்வகையில், உயர்ந்த வாழ்க்கைத்தரத்தில் இருப்பவர்களை மிகக்குறைந்த வீதமாகவே கணக்கிட்டுக்கொள்ள முடியும். அவ்வாறு கணக்கிட்டுக் கொள்ளப்படும் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தில் உள்ளவர்களில் டாக்டர்களும் அடங்குவர்.

இலங்கை அரச சேவையில் முதல்தர சம்பளத்தை உடைய ஒரு நெகிழ்ச்சியற்ற சேவையாக மருத்துவ சேவை கருதப்படுகின்றது. அதேபோல், துணை மருத்துவசேவையும் தனியான சம்பளத்திட்டத்தில் கௌரவமான வேதனத்தைப் பெற்றுக்கொள்கின்றது.

இலங்கையின் ஏனைய அரசசேவைகளோடு ஒப்பிடுமிடத்து உயர்ந்த வேதனத்தைப் பெற்றுக்கொள்ளும் டாக்டர்கள் சம்பள முரண்பாடுகளை முன்நிறுத்தி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் எனில், மருத்துவசேவையில் மனித நேயமற்றவர்கள் புகுந்துவிட்டார்கள் என்பதே உண்மையாகும்.

டாக்டர்கள் தமது வேதனம் குறித்த கோரிக்கைகளை முன்வைக்கலாகாது என்பது எமது கருத்தல்ல, ஆனால் தொழிற்சங்கப் போராட்டம் என்பதற்கும ஓர் எல்லை - வரையறையுண்டு. அதனை விடுத்து எமக்குத்தான் மருத்துவம் தெரியும், நாம் நினைத்தால். மனித உயிர்கள் துடிக்கத்துடிக்கப் பிரிந்து போகும். எங்களால் ஆக்கவும்முடியும், அழிக்கவும்முடியும் என்ற ஆணவச்செருக்கில் நடந்து கொள்வது நியாயமாகாது.

இத்தகைய நடவடிக்கைகள் மருத்துவர்களின் தொழிற்சங்கங்களுக்கு மட்டுமல்ல, அது மருத்துவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலேயே பரிதாப விளைவுகளை உண்டுபண்ணிவிடும்.

இலங்கைவாழ் மக்கள் தெய்வீக நம்பிக்கை உடையவர்கள். பாவ, புண்ணியம் என்ற கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட்டவர்கள், இந்த மனிதப் பிறவியில் செய்கின்ற நல்ல கருமங்களே அடுத்த பிறப்பிற்கும், சந்ததிக்கும் நகர்த்தப்படுகின்றதென நம்புபவர்கள்.

இந்நம்பிக்கை மருத்துவ ஆய்வு கூடங்களில் இரத்தப்பரிசோதனைபோல பரிசோதனைக்குட்படுத்தப்படவில்லையாயினும், நம்பிக்கைகளின் அடிப்படைகள் வீண்போனதாகச் சரித்திரம் இல்லை. எனவே, இலங்கை மருத்துவர்கள் தங்களின் மனித நேயமற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டு சிகிச்சை கிட்டாது அவலச்சாவடையும் ஏழைகளின் உயிர்காக்க முன்வரவேண்டும்.

# கடந்த இரண்டு வருடத்தில் மக்களின் வாழ்வு மழுங்கடிப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.தே.மு.ஆட்சிசெய்த 2 வருடகாலத்தில் வடகது, தெற்கு மக்களுடைய எதிர்காலம் மழுங்கடிக்கப்பட்டுள்ளது. இதனால் அம்மக்கள் தற்போது அச்சமடைந்துள்ளார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, நுகேகொடவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், விவசாயிகளின் அறுவடைக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. விரும்பிய விலைக்கு நுகர்வோரால் ஒரு சிறு துண்டுப் பூசணிக்காயைக் கூட வாங்க முடியவில்லை. வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக் காரணமாக பாடசாலைக்குச் செல்லும் சிறார்கள் பட்டினியால் வாடுகிறார்கள். இவை அனைத்தையும் நாம் நீக்க விரும்புகிறோம்.

இந்நாட்டின் சொத்துக்களான சிறார்கள் பற்றி ஐ.தே.மு. அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. மக்கள் பலவழிகளிலும் சுமைகளை அனுபவிக்கிறார்கள். நாளுக்குநாள் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்து வருகிறது. நாம் சகல பாடசாலைச் சிறார்களுக்கும் ஒரு கோப்பை பால் வழங்க இருக்கிறோம்.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாம் வெற்றியீட்டுவோமானால் மக்களும் பிரதமரின் கட்சியைச் சேர்ந்தவர்களுமே அவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (தி-6)

## நிலைமைகளை அணுக போராளிகள் மட்டு. செல்வர்

### தமிழ்ச்செல்வன் தகவல்

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் நியமிக்கப்பட்ட கிழக்குப் பிராந்தியத் தளபதிகள் மற்றும் போராளிகள் விரைவில் மட்டக்களப்புக்குச் செல்லவுள்ளதாக விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் மட்டக்களப்புக்குச் சென்றதும், அங்கு அவர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை ஏற்றுச் செயற்படுவார்கள்.

மட்டக்களப்பில் சமாதானச் சூழலைச் சீர்குலைக்காது முன்னெடுத்துச் செல்லவேண்டிய தேவை விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது. அங்குள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளின் உயிர்களுக்கு இழப்பு ஏற்படாதவாறு நிலைமையை சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்பதே எமது தேசியத் தலைவரின் விருப்பம்.

மட்டக்களப்பில் சுமுகமான நிலையை ஏற்படுத்துவதற்கான சகல தந்திரோபாயங்களையும் தீட்டி, அதற்கு ஏற்ப நகர்வுகள் தலைவரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மிக விரைவில் அதற்கான தீர்வு எட்டப்பட்டுவிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## வீடமைப்பு விபரங்களை அனுப்புமாறு சுற்றுநிருபம்

(காரைநகர்)

யாழ.மாவட்டத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில் இவ்வருடம் இருப்பிட வசதிகளுக்கே முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளதால், யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள் ரீதியாக வீடமைப்புத் தொடர்பான விபரங்களைச் சேகரித்து உடனடியாக அனுப்பிவைக்கும்படி யாழ். செயலகத்தினால் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்று அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

அனுப்பிவைக்கப்பட்டுள்ள இச் சுற்றுநிருபத்தில்,

நடப்பாண்டில் உலக வங்கியின் உதவியுடன் வீடமைப்புத் திட்ட வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதற்கு ஏற்ற வகையில், 1983ஆம் ஆண்டு வன்செயல் காரணமாகச் சேதமடைந்த வீடுகள் புனரமைப்புச் செய்தல் மற்றும் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் வீட்டுத் திட்டங்களைப் பூர்த்தியாக்கல் போன்றவற்றுக்கான பயனாளிகளின் விபரம், இனிவரும் காலத்தில் செயற்படுத்தப்படவுள்ள வீடமைப்புத் திட்டப் பயனாளிகளின் விபரம் என்பவற்றைத் தாமதிக்காது உடனடியாக அனுப்பிவைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-246)

### தினசரி தியானம்

#### விவேகச் சிந்தனைகள்

உன் நிலை எதுவாக இருந்தாலும் அதைக் குறித்து நீ கவலைப்பட வேண்டாம். இலட்சியத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறியபடியே இரு. நமது நாடடை முன்னேற்றமடையச் செய்யவிரும்பினால் இந்தப் பாமர மக்களுக்காக நாம் வேலை செய்தாக வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்.

## தேர்தல் கண்காணிப்புக்கு அமெரிக்கா நிதியுதவி

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலை ஊழல்களற்ற விதத்தில் நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதைக் கண்காணிக்கும் பணிகளுக்காக அமெரிக்க அரசாங்கம் 6 இலட்சம் அமொக்க டொலர்களை வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்பி லன்ஸ்டன்ட் இந்நிதியுதவி வழங்குவது குறித்து அறிவித்தார்.

மேற்படி நிதியானது அமெரிக்க சர்வதேச அபிவிருத்திக்கான உதவி நிறுவனமூடாக வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் அபிவிருத்திப்பணிகளுக்காகப் பலகாலங்களாகத் தொடர்ந்து உதவிகளை வழங்கிவரும் அமெரிக்க நிதி நிறுவனம் நீதியான தேர்தலுக்காக கண்காணிப்புப் பணிகளுக்காக தற்போது நிதியுதவியை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி-18)

## மலேசியத் தூதுவர் றோசிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் திருமதி றோசி சேனாநாயக்க இராஜதந்திர பாரம்பரியங்களை மீறியிருப்பாரானால், அவருக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமதி றோசி சேனாநாயக்க அங்கிருந்து இலங்கைக்கு வந்து அரசியலில் ஈடுபட்டதாக தகவல்கள் தொடர்ந்து வெளியாகியதையடுத்தே ஜனாதிபதி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதற்குமுன்னரும் இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சருக்கு ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

ஆனால், வெளிவிவகார அமைச்சர் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் இலங்கை அரசியலில் ஈடுபட்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் தம்மிடம் தற்போதிருப்பதாகவும் அதில் குறிப்பிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதனை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் மறுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி-60,10)

### தவக்கால சிந்தனை-24

சொந்த மண்ணை அன்னியர்க்கு காட்டிக் கொடுத்ததால் எட்டப்பன் மக்கள் மனதிலே அரக்கனாக அமர்ந்திருக்கிறான். ஒன்றாய் இருந்து உண்டு குடித்த யூதாஸ் தன் தலைவன் இயேசுவைக் காட்டிக்கொடுத்ததால் "நம்பிக்கைத் துரோகி" என்ற பட்டம் பெற்றுள்ளான். ஆக, காட்டிக் கொடுத்தல் என்பது அன்பிற்கு எதிரானது. காட்டிக் கொடுப்பதால் பிறரை ஏளனப்படுத்துகிறோம். அவர்களது வாழ்வை சிதைக்கிறோம். இதோ இன்றைய விழா நாயகர் புனித யோசேப்பு தன் மனைவி மரியாளை காட்டிக்கொடுக்க மனமில்லாதவராய் இருந்த நிலையைக் கண்டு வியக்கிறோம். அவரைப் பாராட்டுகிறோம். காரணம் மரியாளின் மீது அவர் கொண்டுள்ள அன்பு, பற்று, மரியாளின் நிலைபற்றிய முழு அறிவு இல்லாத நேரத்திலும் அவளது மாண்பை சிதைக்க விரும்பவேயில்லை. இவரல்லோ நீதிமான். நமது சுயலாபத்திற்காக இன்பத்திற்காக எத்தனை பேரைக் காட்டிக்கொடுத்து அவர்க ளது வாழ்வை சிதைத்திருக்கிறோம்? புனிதரின் பெருந்தன்மை, பொறுமை, புரிந்து கொள்ளுதல் நமக்குக் கிடைக்க புனிதர் வழியாக மன்றாடுவோம்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.:
021222 3916
0777 801038
கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

## வடக்கின் மாபெரும் போர் நேற்று ஆரம்பம்

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி நேற்று ஆரம்பமானது

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றுமுதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரிஅணி 41ஓவர் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து101ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பரியோவான் கல்லூரி அணியினர் ஆட்ட நேர முடிவின் போது 4 விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றனர். (ச)

## பூரண ஹர்த்தால்

(கொழும்பு)

ஓட்டமாவடி, காவத்தை முனைப் பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து அங்கு நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்கள் ஓட்டமாவடி காவத்தை முனைப் பிரதேசங்களிற்குச் சென்று தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்து, நேற்று முன்தினம அப்பகுதி மககள் ஆர்ப்பாட்டம் செய்த போது இடம்பெற்ற அசம்பாவிதங்களைக கண்டித்தே நேற்று அப்பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (தி-60,10)

## ஓ.எல்...

ட்சை முடிவுகள் இம்முறை எதிர்பார்த்ததை விட சற்று முன்னரே வெளியாகின்றன. ஏனெனில் திடீரென பொதுத் தேர்தல் அறிவிப்பு விடுக்கப பட்ட காரணத்தால் எமது திணைக்களம் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கு அவசியமான தரவுகளை வெகு விரைவாகவே செய்து முடிக்க வேண்டியிருந்தது எனக குறிப்பிட்டார். (இ-6)

## மெய்வல்லுநர் போட்டி

(கோப்பாய்)

அச்செழு மெதடிஸ்த மிசன் வித்தியாலய வருடந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய அதிபர் க.சின்னராசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-79)

## யாழ். மண்ணுக்குப்...

சாதனைகளைப்படைத்த இக்கல்லூரிகளின் 100ஆவது கிரிக்கெட் சமரானது யாழ் மண்ணிற்கும் தமிழ மக்களுக்கும் பெருமை சேர்க்கும் ஒருவிடயமாகும். யுத்தத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நிலையிலும் கூட இப்போட்டிகள் தொடர்ந்து நடைபெறுவதானது யாழ். மக்கள் விளையாட்டின் மேல் கொண்டுள்ள பற்றையும் அதன் அவசியத்தையும் உணர்த்தி நிற்கின்றது.

உலகம் முழுவதும் இருக்க கூடிய இக்கல்லூரிகளின் பழைய மாணவர்கள் இக்கிரிக்கெட் விழாவிற்கு வந்திருப்பதானது சிறப்பானது மாத்திரமலல இக் கல்லூரிகளின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கும் ஏனைய பௌதிக வளர்ச்சிக்கும் அவர்களது பங்களிப்பு பெருமளவு இருக்குமென நம்பலாம். இந்த 100ஆவது கிரிக்கெட் விழாவையிட்டு பெருமை அடைவதுடன் இவ்விழா சிறப்புடன் நிறைவேற வாழ்த்துகின்றேன் என சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## என்னுடன்...

கள் எதையும் விரும்பும் பழக்கம் என்னிடத்தில் இல்லாதமையால், அது கைகூடவில்லை. எனது கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே பல்வேறு தொடர்புகள் இருந்துவருவதாகவும், அது தொடர்பாக இப்போது எதுவும் கூறமுடியாது என்றும் கூறிய ஜனாதிபதி, எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று அரசு அமைத்ததும், பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவைப் போல் தனக்கு நெருக்கமான ஒரு சிலரிடம் ரகசியம் பேசுவதுபோல் அல்லாமல், சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடததுவேன் என்றும் கூறினார். (ம)

## சொல்ஹெய்ம்...

போர் நிறுத்த நடைமுறைகள் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்தல் போனற முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-18)

## அன்னை பூபதியின்...

உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப படவுள்ளது. அத்துடன் ஏப்ரல் மாதம 17,18 மற்றும 19ஆம் திகதிகளில் தமிழா தாயகப் பிரதேச மக்களால் அடையாள உண்ணாவிரதமும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இறுதி நாளான ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி மாலை, நினைவஞ்சலிக் கூட்டங்களும் இடம்பெறவுள்ளது. (ச)

## மரணஅறிவித்தல்

### கந்தையா தனபாலசிங்கம்

(மின்மாணி வாசிப்பாளர், இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், கந்தர்மடம், இல: 14/1, புகையிரத வீதியைச் சேர்ந்த கந்தையா தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (16.03.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இலட்சுமியின் அன்பு மகனும், இந்திராவின் அன்புக் கணவரும், ஜெயரஞ்சினி (பிரான்ஸ்), சுஜீவன், சுஜேந்திரன் (சமுர்த்தி உத்தி யோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), சுதாகரன் (கொழும்பு), ஜெயசீலி (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகதாஸ் (பிரான்ஸ்), றஜனி, செல்வமலர், ஜெனோதாஸ் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிஷோர், சஜிதா, பவித்திரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், குணபாலசிங்கம், செல்வராசா, பத்மநாதன், காலஞ்சென்ற தவமணி, நேசமலர், தேவிகா, இராசமலர், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.03.2004) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வண்ணை. கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல: 14/1, புகையிரத வீதி,
கந்தர்மடம்.

தகவல்:
குடும்பத்தினர்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

ஏலவிற்பனை

எமது கொத்தணிக்குச் சொந்தமான பின்வரும் பொருட்களான இரும்புத் தொட்டி (10000 போத்தல்) -01, இரும்புத் தொட்டி (2400 போத்தல்) -01 விளைவு தொட்டி (வெள்ளிரும்பு) -06, வெற்றுப்போத்தல் (750 மில்லி லீற்றர்) -5000, வெற்றுத் தகர பெரல் (210 லீற்றர்) -35 என்பன எதிர்வரும் 24.03.2004ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நவாலியிலுள்ள பனை தென்னைவள பல்தொழிற் பேட்டையில் வைத்து ஏல விற்பனை செய்யப்படும்.

நிபந்தனை:-

ஏலத்தில் தெரிவு செய்யப்படுவோர் பெறுமதியின் 50% உடனும், மீதியை ஒரு வாரத்திற்குள் செலுத்துவதுடன் 10 நாட்களுக்குள் பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும்.


பொது முகாமையாளர்,
வலிகாமம் கொத்தணி,
மானிப்பாய்.
(C/7391)

மேய்ப்பனின் மந்தையில் இருந்த கறுப்பாடுகள்...!


வீ.ஆனந்தசங்கரி

மேய்ப்பனின் தலைமையில் பல வெள்ளாடுகள்...
புல்லையும் மேய்ந்தன வேலியும் தாண்டின...
மேய்ந்தனவெல்லாம் நலமாயிருக்க...
தாண்டின கறுப்பாடுகள் நொண்டியாய் போனது...

மேய்த்தவன் மனது நொந்து போனாலும்
வேலி தாண்டிய அதுகள் கொழுத்திருந்தாலும்..


பெ.சூரியமூர்த்தி

தூரத்தே பறையொலி மிகச் சத்தமாய் கேக்குது...
அறுப்பவனும் அங்கே கத்தியைத் தீட்டிறான் - பாவம்
வேள்வியில் அந்தக் கறுப்பாடுகள் விலையாகப் போகுது...!

என்செய்வோம்... என்செய்வோம்... எல்லாமே விதிப்பலன்தான்.

தந்தை செல்வா காட்டிய அகிம்சை வழி நின்று தமிழினம்
சுயநிர்ணய உரிமையுடனான மரபு வழி தாயகம் மலர்ந்திட

வீ.ஆனந்தசங்கரி (தலைவர்-தமிழர் விடுதலைக் கூட்டணி)
தலைமையிலான

சுயேச்சைக் குழு 1

வெற்றியை நிச்சயப்படுத்த சத்தியம் செய்வோம்

தமிழர் விடுதலைக் கூட்டணி கனடா - உறுப்பினர்கள்
(வல்வெட்டித்துறை ஆதரவாளர்கள்)

அறிவித்தல்:- எக்காரணம் கொண்டும் சுயேச்சைக்குழு - 1 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளமாட்டாது என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றோம். தயவுசெய்து வீண் வதந்திகளை நம்பவேண்டாம். (C/7441)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.